விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

பக்கங்கள்: பதின்னான்கு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 புரட்டாதி 22 வியாழக்கிழமை (08.10.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 293





# மு.க.ஸ்டாலின் தலைமையிலான குழு இம்மாத இறுதியில் இலங்கைக்கு வரும்

## நலன்புரி முகாம்களுக்கும் செல்வர்

(சென்னை)

போரினால் இடம் பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள மக்களின் நிலை குறித்து ஆராய இந்திய மத்திய அரசின் ஏற்பாட்டில் தமிழக துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான குழு இம்மாத இறுதியில் இலங்கைக்கு வரவுள்ளது. இவர்கள் வடக்கில் உள்ள நலன்புரி முகாம்களுக்கு நேரில் சென்று பார்வையிடவுள்ளனர். (14ஆம் பக்கம் பார்க்க)



## மக்கள் அச்சம் இன்றி வாழும் நிலை இலங்கையில் உருவாக வேண்டும்

### ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கையில் மக்கள் அச்சம் இன்றி வாழும் நிலை ஏற்படவேண்டும் என்று வலியுறுத்தி உள்ளார் இந்தியாவின் வாழும் கலை அமைப்பின் நிறுவுனர் ஸ்ரீ ஸ்ரீ ர்விசங்கர்.

இரண்டு நாள் பயணமாகக் கொழும்புக்கு வந்த அவர் அங்கு பெரும் எடுப்பிலான தியான நிகழ்ச்சியை நடத்தினார்.

இந்தியாவில் உள்ள ஈழத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வரும் ரவிசங்கர், இலங்கைக்குப் பயணம் செய்துமக்கள் வாழ்வதற்கு ஏற்ற அச்சமற்ற சூழல் இங்கு ஏற்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி இருக்கிறார். (ச)

## தமிழர்கள் நாட்டை விட்டுச் செல்வதை சிங்களமக்கள் ஆட்சேபிப்பதில்லை!

### இந்திய இணையத்தளம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையை விட்டு தமிழர்கள் வெளியேறுவதை சிங்களவர்கள் ஒருபோதும் ஆட்சேபிப்பதில்லை என இந்திய இணையத் தளமான ரெடிஃப் தெரிவித்துள்ளது. போர் முடிபடைந்த பின்னர் தமிழ் நாட்டை வந்தடைந்த ஈழத்தமிழ் அதிகளைச் சந்தித்துப் பேசிய இணையத்தளத்தின் ஊடகவியலாளர் கணேஷ் நாடார் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவரது செய்திக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் உள்ள தமது தமிழ் உறவுகளுக்கான ஆதரவைத் தெரிவிப்பதற்காக தமிழ் நாட்டின் (14ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் விஞ்ஞானிக்கு நோபல் பரிசு



(ஸ்டாக்ஹோம்)

2009ம் ஆண்டிற் கான வேதியியல் துறை கண்டுபிடிப்புக்காக சிதம்பரத்தை சேர்ந்த தமிழரான, விஞ்ஞானி வெங்கட்ராமன் ராமகிருஷ்ணனுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. பிரிட்டன் கேம்பிரிட்ஜ் பல்கலையில் உள்ள எம்.ஆர்.சி. ஆய்வகத்தில் ரைபோசோம் (14ஆம் பக்கம் பார்க்க)

## கட்சி அலுவலகங்களுக்கான பொலிஸ் பாதுகாப்பு வாபஸ்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சி சபை தலைவர்கள், உறுப்பினர்களுக்கும், அரசியல் கட்சி அலுவலகங்களுக்கும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக் கும் வழங்கப்பட்டிருந்த பொலிஸ் பாதுகாப்பு வாபஸ் பெறப்பட்டுள்ளது. மாநகரசபை முதல்வருக்கு மாத்திரம் பாதுகாப்பு வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் பத்மநாபா அணி மற்றும் ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சி ஆகியவற்றின் காரியாலயங்களுக்கு வழங்கப்பட்டிருந்த பொலிஸ் பாதுகாப்பும் வாபஸ் பெறப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இது தொடர்பாக பொலிஸ் மா கருத்துக் கூற மறுத்துவிட்டார். (14ஆம் பக்கம் பார்க்க)

## நெதர்லாந்துத் தூதுவர் நேற்று யாழ். விஜயம்

### கோட்டை புனரமைப்புக் குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டை புனரமைப்பு பணிகள் தொடர்பில் ஆராய இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார்.

யாழ். கோடை தற்போது படையினரால் புனரமைக்கப்பட்டு வருகிறது. இக்கோட்டை ஒல்லாந்தர்களால் அமைக்கப்பட்டது.

இதனால் தற்போது யாழ். கோட்டை புனரமைப்பு பணிகள் (14ஆம் பக்கம் பார்க்க)

## நாணயத்தாள்களை சிதைத்தால் சிறைத்தண்டனையும் அபராதமும்

### மத்திய வங்கி அறிவிப்பு

(கொழும்பு)

நாணயத்தாள்கள் பாவனை தொடர்பாக இலங்கை மத்திய வங்கி பொது மக்களுக்கு எச்சரிக்கையொன்றை விடுத்துள்ள அதே வேளை சில அறிவுறுத்தல்களையும் வழங்கியுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் அதிகாரமின்றி எந்தவொரு நாணயத்தாளினையும் வெட்டுதல், துளையிடுதல், அச்சிடுதல், (14ஆம் பக்கம் பார்க்க)

## ஏ-9 பாதை திறந்தது முதல் 39 ஆயிரம் பேர் பயணம்

### அரச அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து ஏ-9 பாதையூடாக யூலை 22 ஆம் திகதி முதல் ஒக்டோபர் 2ஆம் திகதிவரை ஆயிரத்து 188 பஸ்களில் 39 ஆயிரத்து 265 பேர் வெளிமாவட்டங் களுக்கு பயணம் செய்துள்ளனர் என யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் (14ஆம் பக்கம் பார்க்க)

## ஈரானிய தூதரக அதிகாரி இராணுவ தளபதியுடன் பேச்சு

(கொழும்பு)

கொழும்பில் உள்ள ஈரானிய தூதரக இரண்டாம் நிலை அதிகாரியான பிரிகேடியர் சயீட்ரசா அஷ்காரி நேகா, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜெயசூரியவை சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்பின் போது தரைப் படையினர் வைரவிழாக் கொண்டாட்டங்களுக்கு ஈரானிய தூதரக அதிகாரி தனது பாராட்டுதல்களைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதற்குப் பின்னர் (14ஆம் பக்கம் பார்க்க)






யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் செய்த நெதர்லாந்துத்தூதுவர் யாழ். செயலகத்துக்குச் சென்று அரச அதிபருடன் பேசுவதைப் படங்களில் காணலாம்.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## செயற்பாடு சார்ந்த நாட் பாடசாலை

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தின் பட்டமேற் கல்வி டிப்ளோமா 2009/2010 கல்வியாண்டுக்கான செயற்பாடு சார்ந்த நாட்பாடசாலை நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்-பிராந்திய நிலையத்தில் நடைபெறுமென இணைப்பாளர் அறிவித்துள்ளார். (சு)

## வேம்படி வீதியில் 3 வீடுகளில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வேம்படி வீதியிலுள்ள மூன்று வீடுகளில் நேற்று முன்தினம் இரவு திருட்டு இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் ஒரு வீட்டில் நீர் இறைக்கும் இயந்திரம், மற்றைய வீட்டில் உடுபுடைவைகள், மூன்றாவது வீட்டில் 10 கோழிகள் என்பவற்றை திருடிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

வீட்டிலிருந்தவர்கள் நித்திரைக்குச் சென்ற பின்னர் இத்திருட்டுக்கள் இடம்பெற்றிருக்கலாம் என கூறப்பட்டது. (எ)

# பெண்கள் வன்முறைக்கு கவலைப்படுபவர் மொனிக்கா விடயத்தை மறந்து விட்டார்

## பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கிண்டல்




(கொழும்பு)

உலகின் ஏனைய நாடுகளில் பெண்களுக்கு எதிராக நிகழும் வன்முறைகள் குறித்து அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கிலாறி கிளின்டன் கவனம் செலுத்துவதற்கு முன்பாக சொந்த நாட்டிலேயே நிகழும் அத்தகைய வன்முறைகள் குறித்து அக்கறை காட்டட்டும் என பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

கிலாறியின் கணவரும் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியுமான கிளின்டன் மீது மொனிக்கா லிவிங்சி என்ற பெண் தெரிவித்த பாலியல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் குறிப்பிட்ட பிரதமர், அந்தச் சம்பவங்களை கிலாறி மறந்துவிட்டார் போலும் என, தெரிவித்தார்.

ஏனைய நாடுகளில் பெண்கள் துன்புறுத்தப்படுகிறார்கள் என்று குற்றம்சாட்டுவதற்கு பதில் அவர் தனது வீட்டுக்குள் என்ன நடக்கிறது என்று முதலில் பார்க்கட்டும். மொனிக்காவின் விடயத்தை அவர் மறந்துவிட்டார் போலத் தோன்றுகின்றது என்று வானொலி ஒன்றிற்கு நேற்றுக்காலை வழங்கிய நேர்காணலில் பிரதமர் தெரிவித்தார்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அண்மையில் உரையாற்றிய கிலாறி, போரில் பாலியல் வன்முறைகள் ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தப்படும் நாடுகளில் ஒன்று இலங்கை எனக் குறிப்பிட்டிருந்தார். ஆனால் இலங்கை போரில் ஈடுபட்டிருந்த எந்தத் தரப்பு அத்தகைய குற்றத்தைச் செய்



தது என அவர் குறிப்பிடவில்லை.

இருப்பினும் படையினருக்கு எதிராகவே கிலாறி அந்தக் குற்றச்சாட்டை தெரிவித்திருந்தார் என்று எடுத்துக் கொண்டு அரசியல் தலைவர்கள் அதற்குப் பதிலளித்து வருகின்றார்கள்.

அவ்வாறே கிலாறி குறித்து இப்போது பிரதமரும் கருத்துத் தெரிவித்துள்ளார். கிலாறியின் கருத்துக்கள் சாதாரணமானவை அல்ல என்று தெரிவித்த அவர் இருப்பினும் அது தொடர்பில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் விடுத்த விளக்கத்தை அடுத்து இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டதாகவும் குறிப்பிட்டார். (சு-5)

## புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

ர.சாந்தரூபன் (174), ரா.விதுசன் (165), வ.தேனுசன்(164), அ.கபீர்த்தன் (163), ந.நிவேதன் (161), ப.அஜித் (160), றே.பெஞ்சமின் (159), கு.நவநீதன் (157), ச.செகராசசோழன் (156), க.இயல்ஸ்பெல்மன் (154),

அ.சஞ்சயன் (153), தே.அனற்மேஸ் (151), செ.தக்ஷாயினி (149), ம.ஜோனத்தன் (148), செ.தஸ்மன் (147), வ.நிதர்சிகா (145), த.லக்சன் (145), ம.ஆதித்தியா (145), ஜெ.டிலக்ஷா (145), நீ.றெஜினோ (145), இ.யூலியன் (144),

ம.சிவப்பிரியன் (142), கு.ஜெயராமன் (140), இ.ஜெனோசன் (140), அ.பிரதிப்சன் (140),

தம்பசிட்டி

மெ.மி.த.க.பாடசாலை

ச.கோபிதன் (170), இ.உதயதர்ஷன் (162), சி.நிதுஷா (160), வி.வினோதினி (154), சோ.கிரிதரன் (152), சு.மதுசன் (149), பி.பிருந்தா (149), இ.கௌதமி (148), ரா.கமல்ராஜ் (147), தி.தனுஜன் (145), சி.மாதுமை (144), சி.சுஜன் (142),

புங்.ஸ்ரீ சித்திவிநாயகர் ம.வித்தியாலயம்

உ.ரூபன் (140), (சு)

## உதைபந்தாட்டப் போட்டி

'இளைஞர்களுக்கான நாளை' உதைப்பந்தாட்டப் போட்டி இன்று மாலை 4 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமாகிறது.

இன்றைய போட்டியில் ஏழாலை ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (சு)


யாழ்ப்பாணம் மாநகரசபை வீதியோர வாகனங்களுக்கான வரி அறவீட்டை குத்தகைக்கு வழங்குவதற்கான

**கேள்வி அறிவித்தல் - 2009**

பின்வரும் இடங்களில் தரித்து நிற்கும் வாகனங்களுக்கான வரி அறவிடுதலை 15.10.2009ம் திகதி முதல் 31.12.2009ம் திகதி வரையான காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க கேள்விகள் எதிர்வரும் 12.10.2009ம் திகதி பெரிய கடை மரக்கறிச் சந்தைக்குள் இருக்கும் துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலைய முன்றலில் பகிரங்க கேள்வி மூலம் வழங்கப்படவுள்ளன.

01. பருத்தித்துறை வீதி தொடக்கம் கே.கே.எஸ்.வீதி வரையான ஆஸ்பத்திரி வீதி.
02. நாவலர் வீதி தொடக்கம் ஆஸ்பத்திரி வீதி வரையான கஸ்தூரியார் வீதி.
03. ஆரியகுளம் தொடக்கம் கே.கே.எஸ். வீதி வரையான ஸ்ரான்லி வீதி வரை.
04. பொன்னாலை வீதி.
05. புதிய தபால் நிலையச் சந்தி தொடக்கம் கே.கே.எஸ்.வீதி மின்சார நிலைய சந்தி வரையான கே.கே.எஸ்.வீதி.
06. மின்சார நிலைய வீதி.
07. பண்ணை மினிபஸ் தரிப்பிடம்.
08. றீகல் திரையரங்கு அருகாமையில் உள்ள வெற்றுக் காணி.

ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற்+தேசத்தைக் கட்டி எழுப்பும் வரி நீங்கலாக) 150000/= கேள்வி கோரி கேள்வியில் சித்தி பெற்றவர்கள் வற்வரி உட்பட முழுத் தொகையையும் உடன் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட வேண்டும்.

நிபந்தனைகள்

01. கேள்வியிற் சித்தியடையும் சந்தர்ப்பத்தில் குத்தகைப் பணம், பெறுமதி சேர் வரி (Vat) முழுவதையும் கேள்வி திறத்தல் திகதியிலிருந்து ஒரு வார காலத்திற்குள் செலுத்துவதுடன் சபையுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடல் வேண்டும். தவறுமிடத்து குத்தகை இரத்துச் செய்யப்படுவதுடன் பிணைப் பணம் மீளளிக்கப்பட மாட்டாது.
02. மாநகர சபையின் கட்டளைச் சட்டங்கள், பிரமாணங்கள், உப விதிகள், பணிப்புரைகள் ஆகியனவற்றுக்கு அமைவாக குத்தகை பொறுப்பேற்கப்பட வேண்டும்.
03. மாநகர சபையில் அங்கீகரிக்கப்பட்ட கோலவுடை அணிந்து அறவீடு செய்தல் வேண்டும்.
04. வாகன வரியானது காலை 7.00 மணி தொடக்கம் மாலை 7.00 மணிவரையாகும்.
05. தனியார் பஸ், லொறி ஒன்றுக்கு ரூபா 20.00 (Vat வரி நீங்கலாக) உம் மோட்டார் சைக்கிள், சைக்கிள் தவிர்ந்த ஏனைய வாகனங்களுக்கு ரூபா. 10.00 உம் மட்டுமே அறவிடப்படலாம். குறிப்பிட்ட கட்டணங்களுக்கு மேல் அறவிட்டால் தங்கள் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படும்.

முச்சக்கர வண்டி உரிமையாளர், தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தில் பதிவு செய்தால் குறிப்பிட்ட கட்டணம் போதுமானதாகும். பதிவு செய்யாதவர்களுக்கு குறிப்பிட்ட கட்டணத்துடன் மேலதிக ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் ரூபா. 5.00 அறவிடப்படலாம்.

ஆணையாளர்,
மாநகர சபை.

(C-3455)



**விற்பனையாகிறது**

திராட்சை ஓர் அறிமுகம்

அறிமுகம், செய்கைமுறை, உலகப்பரம்பல் ஆகிய முப்பகுதிகளையும் 24 அதிகாரங்களையும் கொண்ட, தமிழில் முதன்முதலாக திராட்சைபற்றி எழுதப்பட்ட முழுமையான நூல். விவசாயிகள், பொதுமக்கள், மாணவர்கள் படித்துப் பொருளாதாரத்தை மேம்படுத்த அரிய சந்தர்ப்பம்.

விற்பனையாளர்: பூபாலசிங்கம் புத்தகசாலை.

(C-3449)



EXPOAIR
your friend in the skies...

Special Airfares for Senior Citizens ...

Effective from 8th October 2009 ...

For citizens aged over 60 years a 10% discount is on offer on travel from

Jaffna to Colombo only ...

Special airfare - Rs. 9,225/- ...

விசேட கட்டணக் கழிவு 8.10.2009 முதல் 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த பிரஜைகளுக்கு 10% கட்டணக் கழிவு யாழ்.- கொழும்பு ஒரு வழிப் பயணச் சீட்டுகளுக்கு மட்டும்.

Management ExpoAir

(C-3454)



**தவறிவிட்டது**

மின்சார நிலைய வீதி, சுன்னாகம் தெற்கில் வசிக்கும் யோகேஸ்வரன் பிரதீபன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (782291688V) சுன்னாகம் K.K.S வீதியில் தவறியுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து J/196 கிராம சேவகர் பிரிவில்/ மேற் குறிப்பிட்ட விலாசத்தில்/ 0778658539 எனும் தொலைபேசி இலக்கம் ஊடாகவும் தொடர்பு கொண்டு தந்து உதவவும்.

தகவல்:
யோ.பிரதீபன்

(3756)



MIS கணனிக்கல்வி நிறுவனம்
புதிய பிரிவுகள் ஆரம்பம்

1. Diploma in Java Programming (OOP, Swing, Applet, Postgre SQL, ODBC/JDBC) using NetBeans IDE

2. Diploma in VB.Net Programming (OOP, ADO.Net, SQL Server, Namespaces/Assemblies, API Programming, Crystal Report, DLL Creation)

குறைந்த கட்டணம்

TPNO : 0213216083 , 0776377359

Mr.R.Kumaran - B.Sc. (Computing & IS)

இராமநாதன் வீதியிலிருந்து 150m தூரம் அல்லது K.K.S வீதியிலிருந்து 200m தூரம்
# 74, சபாபதி வீதி தலையாழி பிரம்படி யாழ்ப்பாணம்



**மாட்டு வண்டி சவாரிப் போட்டி**

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 11.10.2009 அன்று மூளாய் பொன்னாலை பெரிய குளத்தில் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி இடம்பெற இருப்பதால் அனைவரையும் அன்புக்கரம் நீட்டி அழைக்கிறோம்.

மூளாய் பொன்னாலை விவசாயிகள்.

(C-3453)



ALLIANCE FRANCAISE DE JAFFNA
61, Kachcheri-Nallur Road, Jaffna
Phone: 021 2228093 - E-mail: alliancejaffna@yahoo.com

Learn French the French Way
French Classes

Alliance Francaise de Jaffna இன் ஊடாக சர்வதேச மொழியான பிரெஞ்சு மொழி வகுப்புக்கள் உள்நாட்டு, வெளிநாட்டு விரிவுரையாளர்கள் மூலம் கற்பிக்கப்படுகின்றன.

சிறுவர்கள், மாணவர்கள், அலுவலர்கள், வெளிநாடுகளில் உயர்கல்வி கற்க விரும்புவோர், ஆசிரியர்கள் மொழி பயில ஆர்வமுள்ள எவரும் கற்கலாம்.

வகுப்புக்கள் சனி, ஞாயிறுகளில்

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அனுமதிகளை இன்றிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்களை நேரில்/தொலைபேசியினூடாகப் பெறலாம்.

(3637)

# பிரிட்டன் இராஜாங்க அமைச்சர் வவுனியாவுக்கு விஜயம்

(கொழும்பு)


உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள சர்வதேச அபிவிருத்திக்கான பிரிட்டனின் இராஜாங்க அமைச்சர் மைக் ஃபோஸ்டர் நேற்று முன்தினம் வவுனியா நிவாரணக் கிராமங்களுக்கு விஜயம் செய்தார்.

சரணடைந்தவர்களின் புனர்வாழ்வு முகாம்களுக்கு விஜயம் செய்த அவர் பிரிட்டனின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் வடிகாலமைப்பு மற்றும் சுகாதார சேவைகளின் நடவடிக்கைகள் பற்றியும் ஆராயவுள்ளார்.

பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமுக்கு சென்ற அவரை அங்குள் சிறுவர் , சிறுமியர் வரவேற்றனர். சரணடைந்தவர்களுள் சிறுமிகள் மற்றும் யுவதிகளின் தையல் கண்காட்சிகளையும் பார்வையிட்டார்.

பிரிட்டனின் இராஜாங்க அமைச்சர் மைக் போஸ்டருடன் இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் தூதுவர் கலாநிதி பீட்டர் ஹேய்ஸ் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, வன்னி கட்டளையிடும் தளபதி மேஜர் ஜெனரல் கமல் குணரட்ன ஆகியோரும் கலந்து கொண்டனர். அங்கிருந்து புறப்பட்டுச் சென்ற அவர் தள்ளாடி முகாமுக்குச் சென்றார்.

எம்.ஏ.ஜி. என்ற அமைப்பினர் நிலக் கண்ணி வெடி, மிதி வெடிகள் அகற்றும் பணிகளில் ஈடுபட்டுள்ள மன்னார் கட்டுக்கரைக் குளம் பகுதிக்கும் சென்று அவற்றின் பணிகள் குறித்தும் ஆராய்வார். மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான முன்னேற்பாடுகளாக நடைபெறும் மிதிவெடிகள் அகற்றும் பணியின் முன்னேற்பாடுகள் குறித்து கண்டறியும் அவர் மெனிக் பாம் வலயம் இரண்டுக்கும் விஜயம் செய்வார். (ஓ-6)



கோப்பாய் சங்கமம் சிறுவர் இல்லம் நடாத்திய சிறுவர் தின விழா கோப்பாய் வடக்கு புனித சூசையப்பர் ஆலய திறந்த வெளியரங்கில் இடம் பெற்ற போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கோப்பாய் றோ. க.த.க. பாடசாலை அதிபர் சிறுமி ஒருவருக்கு பரிசு வழங்குவதையும், அருகில் சங்கம இல்லப் பொறுப்பாளர் அருட்பணி அ. அமல தாஸ் அடிகள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# பயங்கரவாத கருத்துக்களினால் மூளைச் சலவை செய்யப்பட்ட பலர் இன்னமும் எஞ்சியுள்ளனர்

## பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாத அச்சுறுத்தல்கள் காரணமாக முடிவுறுத்தப்படவில்லை எனவும், தமிழீழ விடுதலைப் புலிச் செயற்பாடுகளை முற்றாக இல்லாதொழிக்க இன்னும் கால அவகாசம் தேவைப்படுவதாகவும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், பாராளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாத்தறை மாவட்டத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதத்தை இல்லாதொழிக்கும் இராணுவ நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளபோதிலும், பயங்கரவாத கருத்துக்களினால் மூளைச் சலவை செய்யப்பட்ட நபர்கள் இன்னமும் எஞ்சியிருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உளரீதியாக அவர்களுக்குச் சரியான தீர்வுத் திட்டங்களை வழங்கவேண்டும் எனவும், அதற்கான தலைமைத்துவத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழங்குவார் எனவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவியைப் பொறுப்பேற்கும் காலத்தில் எந்த இடத்தில் குண்டுவெடிக்குமோ என்ற அச்சத்தில் மக்கள் காணப்பட்டதாகவும் தற்போது இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திற்கும் அச்சமின்றி செல்லக்கூடிய நிலைமை உருவாகி உள்ளதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


பெரும் தொகையான சிறுவர்கள் மனதில் தமிழீழ விடுதலைப்புலிகள் இனவாதக் கருத்துக்களை விதைத்திருந்ததாக தெரிவித்த அவர், ஜனாதிபதியின் தலைமையின் கீழ் குறுகிய காலத்தில் மக்கள் மீள்குடியேற்றப்படுவார்கள் எனவும் உறுதியளித்துள்ளார். (ஓ-6)

# இங்கிலாந்து நாவலாசிரியை ஹிலாரி மேன்டலுக்கு புக்கர் பரிசு

16ஆவது நூற்றாண்டைச்சேர்ந்த கதையான உல்ப் ஹால் 'நூலுக்காக இங்கிலாந்தைச் சேர்ந்த நாவலாசிரியை ஹலாரி மேன்ட்லுக்கு புக்கர் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

1520களில் நடந்த நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்ட நாவல் உல்ப் ஹீறல் நூல் ஆகும்.

லண்டனில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற நிகழ்ச்சியில் 50 ஆயிரம் பவுண்ட்ஸ் மதிப்பிலான புக்கர் பரிசை அவர் பெற்றுக்கொண்டார்.




புக்கர் பரிசை இந்தியாவைச் சேர்ந்த சல்மான் ருஷ்டி, அனிதா தேசாய், அரவிந்த் அடிகா, அருந்ததி ராய் ஆகியோர் முன்பு பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)


# வேலைவாய்ப்பு

இலங்கையில் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான

## யூனியன் அஷ்யூரன்ஸ்

யாழ். பிரதான கிளைக்கு பின்வரும் பதவிகளுக்கு

தகுதியானவர்களுக்கு உடனடி நியமனம் வழங்கவுள்ளது



## பதவி வெற்றிடங்கள்



வாகன கடன் வசதி

- பதவி -1: காப்புறுதி ஆலோசகர்
- பதவி -2: தனிப்பட்டோர் நிதி ஆலோசகர்
- பதவி -3: சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி ஆலோசகர்
- பதவி -4: தனிப்பட்டோர் நிதி முகாமையாளர்
- பதவி -5: சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி முகாமையாளர்
- பதவி -6: முகவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்
- பதவி -7: உதவி முகவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்
- பதவி -8: முகவர் அபிவிருத்தி முகாமையாளர்
- பதவி -9: உதவி முகவர் அபிவிருத்தி முகாமையாளர்



மோட்டார் சைக்கிள் கடன் வசதி



கணனி வசதி



கையடக்கத் தொலைபேசி வசதி

தகைமை–க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம் உட்பட ஆறுபாடங்களில் சித்தி (ஆகக் குறைந்த தகைமை)
காப்புறுதித்துறையில் அல்லது சந்தைப்படுத்தல் துறையில் முன்னனுபவம் விரும்பத்தக்கது (கட்டாயம் அல்ல)

நன்மைகள்–நிரந்தர அடிப்படைச் சம்பளத்துடனான வேலைவாய்ப்பு (பதவி 6, 7, 8, 9)
பயிற்சிக்காலத்தின்போது மேலதிக ஊக்குவிப்புக் கொடுப்பனவும் வழங்கப்படும்.
ஓய்வூதியம் வழங்கப்படும்.

## தகைமையுடன் உங்களிடம் நாம் எதிர்பார்ப்பது?

- உங்கள் இலக்கை அடைவதற்கான உறுதியான மனோநிலை
- உங்கள் வெற்றியை நோக்கிப் பணிபுரிவதற்கானஆர்வம்
- திடசித்தம்



வெளிநாட்டு சுற்றுலா

தோற்றுங்கள் நேர்முகத் தேர்விற்கு சுயவிபரக் கோவையுடன்

நேர்முகத் தேர்வு
காலம்:– செவ்வாய்க்கிழமை 13.10.2009 நேரம் :– முற்பகல் 9.30
இடம் :– யூனியன் அஷ்யூரன்ஸ், 139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

நமது பணத்தை செலவு செய்து வெளிநாடு சென்று பகுதிநேரம் கல்வி கற்பதிலும் பார்க்க நம் சொந்த மண்ணிலேயே கல்வியையும் கற்று எமது மக்களுக்கும் சேவை செய்து உழைத்து மகிழ்வதற்கு ஒரு அரிய வாய்ப்பு

யூனியன் அஷ்யூரன்ஸில் இணைவதன் ஊடாக நீங்கள் காப்புறுதி உலகில் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்

தொடர்புகளுக்கு 021-222 3753
0774053274

அ.அன்ரன்
விற்பனை முகாமையாளர்

(C/3450)

## நூறாவது அகவை வைபவம்

(யாழ்ப்பாணம்)

யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி முன்னாள் அதிபர் அமரர் வி. சிவசுப்பிரமணியத்தின் நூறாவது அகவை வைபவம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி அதிபர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பேராசிரரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம், வண பேராயர் சு.ஜெபநேசன், பொறியியலாளர் எஸ்.எஸ். கனகசபை, எஸ். சிவசரவணபவன் ஐயர், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், எஸ்.பரமநாதன், கலாநிதி க.குணராசா, க.சிவாஜி, வைத்திய கலாநிதி து.மகாதேவன், என்.சிவசண்முகமூர்த்தி ஆகியோர் சிறப்புரைகளையும் நிகழ்த்தவுள்ளனர். (ஓ-4)

### வடமராட்சி லயன்ஸ் கழகத்தினால்

## உலக சேவை தினத்தை முன்னிட்டு இளைஞர்களுக்கான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உலகசேவை தினத்தை முன்னிட்டு வடமராட்சி லயன்ஸ் கழகத்தினால் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரியில் இளைஞர்களுக்கான கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

வடமராட்சி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் வி. எஸ்.சிவநாதன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் வரவேற்புரையை கல்லூரி அதிபர் வி.சிவசிதம்பரம் நிகழ்த்துவார்.

அத்துடன் "இள்ளைஞர் தலைமைத்துவம்", "இளைஞர் நேர முகாமைத்துவம்" எனும் விடயங்கள் பற்றி யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்கள் த.கலாமணி, ஆ.சுப்பிரமணியம் ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர்.

உயர்தர மாணவர்களின் உயர்வுக்கு வழிகாட்டும் இக் கருத்தரங்கில் உயர்தர மாணவர்களை பங்குபற்றிப் பயனடையுமாறு வடமராட்சி லயன்ஸ் கழகத்தினர் கேட்டுக் கொள்கின்றனர். (ஓ-6)

## வாசிப்பு மாத செயற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சகல சனசமூக நிலையங்களிலும் வாசிப்பினைத் தூண்டும் வகையிலான செயற்பாடுகளில் ஈடுபடுமாறு ஏற்கனவே யாழ்.மாநகரசபை அறிவுறுத்தியுள்ளது.

இதற்கேற்ப அரியாலை சனசமூக நிலையத்தினால் எட்டுப்பேர் கொண்ட வாசிப்பு அமுலாக்கல் குழு தெரிவு செய்யப்பட்டு இதன் மூலம் தமது நிலையத்தில் சுவரொட்டி ஒட்டல் பதாகைகள் கட்டல், கதை, கட்டுரைப் போட்டி, விவாதமேடை, புத்தகக் கண்காட்சி என்பனவற்றை நடாத்தி வருவதாக யாழ். மாநகர சபைக்கு அறிவித்துள்ளனர். (ஓ-30)

## மலக்கழிவை பசளையாக்கும் திட்டம் யாழில் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மலக்கழிவை இயந்திரங்கள் மூலம் எரித்து பசளை தயாரிக்கும் திட்டம் ஒன்றை ஐ.ஆர்.டி.நிறுவனம் முன்னெடுக்கவுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இதுதொடர்பில் யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்ததாவது,

யாழ்.மாவட்டத்தில் மலக்கழிவுகள் பல இடங்களில் கொட்டப்படுவதனால் பல பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. இதனைத் தவிப்பதற்கும் மலக்கழிவுகள் மூலம் பசளை தயாரிக்கும் திட்டமொன்றை ஐ.ஆர்.டி. என்ற தொண்டு நிறுவனம் முன் னெடுக்கவுள்ளது.

இந்நிறுவனத்தின் திட்டம் பரீட்சார்த்தமாக சர்வகச்சேரியில் முன்னெடுக்கப்படவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்திலேயே பல இடங்களில் மலக்கழிவுகள் கொட்டப்படுகின்றன.

இதனால் பல பாதிப்புக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. இதனால் சாவகச்சேரியில் இந்நிறுவனம் தனது திட்டத்தை பரீட்சார்த்தமாக மேற்கொள்ளவுள்ளது.

அங்கு மலக்கழிவுகள் எடுக்கப்பட்டு இயந்திரங்கள் மூலம் எரித்து பசளை உற்பத்தி செய்யப்படும். இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் பசளை பயன்படுத்த முடியாவிட்டால் நீக்கப்படும்.

இத் திட்டத்தினால் மலக்கழிவுகளினால் அகச்சூழல் மற்றும் புறச்சூழலில் ஏற்படும் பாதிப்புக்கள் தவிர்க்கப்படுமென யாழ்.அரச அதிபர் க.கணேஷ்.குறிப்பிட்டார். (சு-5)

## தேசிய மட்ட குத்துச் சண்டைப் போட்டியில் யாழ்ப்பாண வீரருக்கு வெண்கலப் பதக்கம்

(யாழ்ப்பாணம்)

தேசிய மட்ட குத்துச் சண்டைப் போட்டியில் யாழ்.மாவட்ட வீரர் சிங்கபாகு சிவகுமாருக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்துள்ளது.

இம்மாதம் 3ஆம் திகதி இடம்பெற்ற குத்துச் சண்டை போட்டியில் 81 கிலோ கிராம் எடைப் பிரிவில் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட வீரர் சிங்கபாகு சிவகுமார் மேல்மாகாண அணி வீரரை எதிர்த்து 3ஆம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை தனதாக்கிக் கொண்டார்.



8 ஆண்டுகளுக்குப் பின் குத்துச் சண்டைப் போட்டியில் யாழ்.மாவட்டத்திற்கு கிடைக்கும் பதக்கம் இதுவாகும்.

2001ஆம் ஆண்டு இடம் பெற்று தேசிய மட்ட குத்துச் சண்டைப் போட்டியில் 2ஆம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தைப் பெற்ற சிங்கபாகு பரப்குமார் இவருடைய சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-7)

## நூல்கள் அன்பளிப்பாக வழங்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு ஆனைக்கோட்டை பொது நூலகம் பொது மக்களிடமிருந்து நூல்களை அன்பளிப்பாக பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

நூல்களை அன்பளிப்புச் செய்ய விரும்புவோர்ஆனைக்கோட்டை பொது நூலக நூலகருடன் தொடர்புகொள்ளுமாறு வலி. தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய் கிராமஉப அலுவலகப் பொறுப்பதிகாரி கேட்டுக் கொள்கின்றார். (ஓ

## நிவாரணக் கிராமங்களில் தங்கியிருக்கும் உறவினர்களைப் பொறுப்பேற்றல்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தின் பாதுகாப்பின் கீழ் நிவாரணக் கிராமங்களில் அல்லது நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டிருக்கும் குடும்பங்களாக அல்லது தனியார்களாக பொறுப்பேற்பதற்கான 4246 விண்ணப்பப் படிவங்கள் பிரதேச செயலகங்களில் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் இருந்து கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் இவை வவுனியா, திருகோணமலை அரசாங்க அதிபருக்கு குடும்பங்களை விடுவிப்பதற்கான அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார். இவற்றில் வேலணை -96, ஊர்காவற்றுறை -24, காரைநகர் -112, யாழ்ப்பாணம்-446, நல்லூர் -145, சண்டிலிப்பாய்-386, சங்கானை -492, உடுவில் -309, தெல்லிப்பளை -318, கோப்பாய் -849, சாவகச்சேரி-342, கரவெட்டி-274, பருத்தித்துறை -399, மருதங்கேணி -54 உள்ளடங்கலாக மொத்தம் 4246 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கான அங்கீகாரம் உரிய அதிகாரியிடம் இருந்து கிடைப்பதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் உரிய அனுமதி கிடைத்த -பின்னர் உரியவர்களுக்கு பொது அறிவித்தல் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-4)

## பரிசளிப்பு விழா

(அல்வாய்)

வல்வை சிவகுரு வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இ. வரதீஸ்வரன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி பா. ரகுநாதன், கௌரவ விருந்தினராக வல்வை ஒன்றியச் செயலாளர் பூ.அகமணி தேவர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி உமா வரதீஸ்வரன் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (ஓ-4-19)




## கணனிப் பயிற்சியின் 2 ஆவது தொகுதி ஆரம்பம்


(அல்வாய்)

வடமராட்சி வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்களுக்கான கணனிப் பயிற்சியில் 2ஆவது தொகுதி ஆரம்பமாகவுள்ளது.

ஆங்கில மற்றும் தகவல் தொழில்நுட்ப வருடத்தில் ஒரு செயற்பாடாக வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனத்தின் அனுசரணையுடன் 2ஆவது தொகுதி பயிற்சிநெறி வாரநாட்களில் பிற்பகல் 1 மணி தொடக்கம் 4மணிவரையும் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 8.30 மணிமுதல் 2.30 மணிவரையும் மொத்தமாக 72 மணித்தியாலங்கள் இப் பயிற்சி நடைபெறவுள்ளது.

மேலும் இப் பயிற்சி நெறியில் கலந்துகொள்ள விரும்புவர்கள் நாளை வெள்ளிக்கிழமை வலயத்தகவல் தொழில்நுட்ப இணைப்பாளரிடம் தொடர்புகொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இப் பயிற்சிநெறியில் பங்குபற்றவுள்ள அனைவரும் நாளை வெள்ளிக்கிழமை 1 மணிக்கு ஞானாசிரியார் கல்லூரியில் நடைபெறும் பயிற்சிநெறியில் தவறாது பங்குபற்றுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஓ-4-19)



நவாலி தெற்கு கொத்துக்கட்டியில் 80ஆயிரம் பனை விதை நடுகைத்திட்டம் நவாலி தெற்கு கிராம அலுவலர் கு. எழிற்செல்வன் தலைமையில் இடம்பெற்றபோது பிரதேச செயலர் ம.ஜெகூ மங்கல விளக்கேற்றுவதையும், அருகில் பனை அபிவிருத்தி சபை அதிகாரி ஐ.ஞானேந்திரா நிற்பதையும், சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலர் திருமதி எ.அ.யோகநாயகம் பூனை விதை நாட்டுவதையும் படங்களில் காணலாம்.

# இன்று ஒரு தகவல்

## இல்லறத் துறவி

இல்லற வாழ்க்கையில் இருந்து கொண்டே கூட ஒருவர் துறவியாக இருக்க முடியும். அப்படி இருந்தவர்தான் சீதையின் தந்தை ஜனகர்.

இதை அப்போது மிதிலை நகரில் இருந்த முனிவர்கள் பலர் நம்பவில்லை. ஜனகர் மீது அவர்களுக்கெல்லாம் சந்தேகம்.

"ராஜபோகங்களுக்கு மத்தியில் சுகமாக இருக்கும் ஜனகர் எப்படித் துறவியாக இருக்கமுடியும்?" என்று முனிவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். இந்தச் செய்தி ஜனகரின் காதிலும் விழுந்தது.

"இந்த முனிவர்களுக்குத் துறவு என்றால் என்ன என்பதைப் புரியவைக்க வேண்டும்" என்று முடிவு செய்தார் ஜனகர்.

அதன்படி அரண்மனையிலிருந்து ஒருவரை முனிவர்களிடம் அனுப்பி வைத்தார்.

அவர் முனிவர்களிடத்தில் போய், "நாளைக்கு மதியம் நமது ஜனகமகாராஜா உங்கள் எல்லோருக்கும் ஒரு விருந்து வைக்க விரும்புகிறார். நீங்கள் எல்லோரும் அவசியம் அதில் கலந்து கொள்ள வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்.

ஜனகரின் வேண்டுகோளை ஏற்று 50 முனிவர்கள் அடுத்தநாள் குறிப்பிட்ட நேரத்திற்கு விருந்து மண்டபத்திற்குச் சென்றிருந்தார்கள்.

அவர்களுக்கு அங்கு 50 இலைகள் போடப்பட்டு பலவிதமான தின்பண்டங்களை பரிமாறியிருந்தார்கள். ஆனால் அதில் ஒரு வேடிக்கை என்னவென்றால்...

ஒவ்வொரு இலைக்கும் மேலே ஒரு நீளமான தலைமுடி தொங்கிக் கொண்டிருந்தது. "அது எப்போது சாப்பாட்டில் வந்து விழுமோ!' என அதைப் பார்த்துப் பயந்து கொண்டே முனிவர்கள் சாப்பிட்டார்கள்.

அரண்மனைப் பணியாளர்கள் உணவு வகைகள் பலவற்றை கொண்டுவந்து பரிமாறினார்கள். முனிவர்களும் சாப்பிட்டு முடித்தனர்.

எல்லோரும் சாப்பிட்டு முடித்த பின் ஜனகர் அங்கு வந்தார். முனிவர்களைக் கைகூப்பி வணங்கி "சாப்பாடு நன்றாக இருந்ததா?" என்று விசாரித்தார்.

அதுமட்டுமல்ல! "சாம்பார் எப்படி இருந்தது? கறிகள் எப்படி இருந்தது?" என்றெல்லாம் வரிசையாக ஒவ்வொன்றாய்க் கேட்க ஆரம்பித்தார். அவர் கேட்ட கேள்விகளுக்கு அங்கிருந்த முனிவர்களில் ஒருவர் கூட பதில் சொல்லவில்லை. அனைவரும் மௌனமாக இருந்தார்கள்.

உடனே ஜனகர் தமது பணியாளர்கள் பக்கம் திரும்பி, "என்ன? எல்லோருக்கும் சரியாகச் சாப்பாடு போட்டீர்களா? இல்லையா?" என்று கேட்டார்.

உடனே முனிவர்கள், "அவர்களை என் கேட்கிறீர்கள்? நாங்களே பதில் சொல்கிறோம். அவர்கள் நன்றாகத்தான் பரிமாறினார்கள். நாங்களும் வயிறு நிறைய சாப்பிட்டோம்" என்றார்கள்.

அப்படியானால் நான் கேட்டதற்கு நீங்கள் ஏன் பதில் சொல்லவில்லை?" என்று வினவினார் ஜனகர்.

"எப்படி பதில் சொல்ல முடியும்? எங்கள் கவனம் முழுவதும் சாப்பாட்டில் எங்கேயிருந்தது? அந்தத் தலைமுடி சாப்பாட்டில் வந்து விழுமோ? என்று அதையே தான் நினைத்துக் கொண்டிருந்தோம்" என்றார்கள் முனிவர்கள்.

அதற்குப் பின் ஜனகர் கூறினார். "அது போலத்தான் நானும் இருக்கிறேன். பிரம்மத்தையே எப்போதும் நினைத்துக் கொண்டிருக்கும் எனக்கு, "இந்த ராஜபோகங்கள் சுகமாக இல்லையா? என்று கேட்டால் சொல்லத் தெரியுமா?" என்றார் ஜனகர்.

முனிவர்களுக்கு அதன் பிறகுதான் ஜனகரைப் பற்றி ஒரு தெளிவு ஏற்பட்டது. ஒருவர் எங்கேயிருந்தால் என்ன? எதை நினைத்துக் கொண்டிருக்கிறார் என்பது தான் முக்கியம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழ் பேசும் முஸ்லிம்களின் தமிழியல், பண்பாடு, சமூகம் பற்றிய உலக ஆய்வு மாநாடு

(கொழும்பு)

தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை தனது முதலாவது உலக ஆய்வு மாநாட்டினை நடத்தவுள்ளது. இம்மாநாடு நம் நாட்டிலும் பிறநாடுகளிலுமுள்ள அறிஞர்கள் ஆய்வாளர்களை ஒன்று சேர்ப்பதுடன் மனிதப்பண்பியல், சமூக விஞ்ஞானம் தொடர்பாகத் தம் கருத்துக்களைப் பகிரவும் அறிவினை அகல்விக்கவும் உதவும்.

எதிர்வரும் 24 திகதி தொடக்கம் 26ஆம் திகதி வரை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் இம்மாநாட்டிலே "தமிழ் பேசும் முஸ்லிம்களின் தமிழியல், பண்பாடு, சமூகம்" எனும் கருப் பொருளுக்குட்பட்டு இலக்கியம், மொழியியல், பண்பாடு, வரலாறு, சமூகவியல், நாட்டார் வழக்காற்றியல், நாடகம், நுண்கலை, கல்வி, அரசியல், பொருளியல், தமிழ் பேசும் முஸ்லிம்களின் மறுமலர்ச்சி என் னும் விடயங்களில் எழுபதுக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப்படவுள்ளன. பல்கலைக்கழகத் துணைவேந்தர், பீடாதிபதிகள் முதலியோருடைய ஆலோசனையுடனும் வழிகாட்டலுடனும் இம்மாநாடு நடைபெறவுள்ளது.

மலேசியாவிலிருந்து 15 ற்கு மேற்பட்ட பேராளர்களும் இந்தியாவிலிருந்து பேராசிரியர் சாய்ப்பு மரைக்காயர், அவருடைய துணைவியார் பேராசிரியை நஸீனா பானு ஆகியோர் உட்பட பலர் பேராளர்களாகப் பங்கேற்கவுள்ளனர்.

பிரபல எழுத்தாளர் தோப்பில் முகம்மது மீரான் மாநாட்டில் பிரதம விருந்தினராகப் பங்குபற்றுகின்றார். இலங்கையின் பேராதனை, கொழும்பு, யாழ்ப்பாண, கிழக்கு, சப்ரகமுவ, ஊவா, பல்கலைக் கழகங்களிலிருந்து பல பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் பேராளர்களாகப் பங்குபற்றுகின்றனர்.

இம்மாநாட்டில் பார்வையாளர்களாகப் பங்குபற்ற விரும்புபவர்கள் ரூபா ஆயிரத்து 1500 செலுத்திப் பதிவு செய்து கொள்ளலாம். பார்வையாளர்களாகப் பங்குபற்ற விரும்புபவர்கள் பதிவுப் படிவத்தினைப் பெற்று எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அப்படிவத்தினை அனுப்பி வைக்க வேண்டும்.

விரும்புபவர்கள் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. திருமதி MSF. ஸாதியா செயலாளர், உலக ஆய்வு மாநாடு, மொழித்துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில், மின்னஞ்சல் saadhiyas@gmali.com. அத்துடன் மாநாட்டு ஒழுங்கமைப்புக் குழு ஏற்றுக் கொண்டவர்களே பார்வையாளர்களாகப் பங்குபற்றலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (6)

# தென்மராட்சி கல்வி வலயத்தின் சைவ சமய பரிசில் நாள் நிகழ்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்தினால் நடத்தப்பட்ட சைவ சமய போட்டிக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் தென்மராட்சி வலய ஆசிரிய ஆலோசகர் செல்வி. இ. இராமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.



சமய நாடகப் போட்டியில் முதலாம் இடம்பெற்ற கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலய மாணவர்களின் 'திருநாவுக்கரசர்' நாடகத்தின் காட்சியை படத்தில் காணலாம்.

அத்துடன் நிகழ்வின் ஆசியுரையை சிவ ஸ்ரீ வீரபத்திரக் குருக்கள் வழங்கவுள்ளதுடன் நடன ஆசிரிய ஆலோசகர் திருமதி. பூ. ஈழநேசனின் நெறிப்படுத்தலிலான நடன நிகழ்வும், சைவ சமய நாடகப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற கொடிகாமம் திருநாவுக்கரசர் மகா வித்தியாலயத்தின் திருநாவுக்கரசர் நாடக நிகழ்வு, உஷன் இராமநாதன் மகா வித்தியாலயம், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, அல்லாரை அ.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.

(6-4-29)

## இராசி பலன்

08.10.2009
(புரட்டாதி 22 வியாழக்கிழமை)
சதுர்த்தி முற்பகல் 9.19 மணிவரை
கார்த்திகை முற்பகல் 11.45 மணிவரை
இராகுகாலம் 1.32-3.02 மணிவரை
சுபநேரம் 7.32-9.02 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | மனோசங்கடம், விவாதம், போசன சுகக்குறைவு, வேலைச்சுமை. |
| இடபம் | வெகுமானம், மாதர் நட்பு, விருந்துபசாரம், சிந்தனை மிகுதி. |
| மிதுனம் | பிறருக்கு உதவுதல், பிரயாணம், முயற்சி தாமதம், சோம்பல் நிலை. |
| கடகம் | தனதானிய சேர்க்கை, சயன சுகம், நண்பர்கள் வருகை, முயற்சி கைகூடும். |
| சிங்கம் | தொழில் மேன்மை, மன மகிழ்ச்சி, எடுத்த காரியம் கை கூடும், பெருமையடைதல். |
| கன்னி | பயந்த சுபாவம், உத்தியோக பங்கம், காரிய தாமதம், திடீர் பயணம். |
| துலாம் | பொருள் விரயம், முழங்கால் வலி, வாகன பயம், அபகீர்த்தி. |
| விருச்சிகம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், மனோதைரியம், கலந்துரையாடல், தனலாபம். |
| தனுசு | நல்ல முயற்சி, பொருள் சேர்க்கை, சுவாரஸ்யம், தன்னம்பிக்கை |
| மகரம் | பணக்குறைவு, தாழ்ந்த சுபாவம், காரிய இடையூறு, உறவினர் சந்திப்பு. |
| கும்பம் | தன்னம்பிக்கைக்குறைவு, தாய்வழி உறவு, சுபசெலவு, ரோக நிலை. |
| மீனம் | வாக்கு மேன்மை, மனோதைரியம், விருந்துபசாரம், தொழில் விருத்தி. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் 1 Kg | திருநெல்வேலி ரூபா | யாழ்ப்பாணம் ரூபா | சாவகச்சேரி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 140 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 85 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 40 |
| தக்காளி | 40 | 50 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 30 | 45 |
| கோவா | 90 | 100 | 80 |
| கரட் | 70 | 80 | 80 |
| பூசணி | 30 | 40 | 15 |
| புடோல் | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 30 | 40 | 35 |
| சின்ன வெங்காயம் | 45 | 55 | 45 |
| பெரிய வெங்காயம் | 35 | 50 | 50 |
| பாகற்காய் | 140 | 160 | 60 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 40 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 50 | 60 | 40 |
| லீக்ஸ் | 120 | 120 | 100 |
| பீற்றூட் | 40 | 50 | 60 |
| கறிமிளகாய் | 50 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 150 | 160 | 140 |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 20 |
| தேசிக்காய் | 230 | 250 | 260 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 30 | 35 |

# ஆப்கானில் கூட்டுப்படை தாக்குதல் தலிபான்கள் 100பேர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் நேட்டோ ஆப்கான் கூட்டுப் படைக்கும் தலிபான்களுக்கும் இடையே 24 மணி நேரம் நடந்த கடும் துப்பாக்கிச் சண்டையில்100க்கும்மேற்பட்ட தலிபான்கள் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். இந்த மோதலில் நேட்டோ - ஆப்கான் கூட்டுப்படையைச் சேர்ந்த 10 வீரர்களும்கொல்லப்பட்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ள அமெரிக்க ராணுவ வீரர்கள் 8 பேரை தலிபான்கள் கொன்றனர். இதையடுத்து நேட்டோ-ஆப்கான் கூட்டுப் படையினர் தலிபானுக்கு எதிரான வேட்கையை திங்கட்கிழமை தொடங்கினர்.

ஹெல்மண்ட் மாகாணம் மற்றும் நுரிஸ்தான் பகுதியில் இந்தத் தேடுதல் நடவடிக்கை முழுவீச்சில் நடந்து வருகிறது. இந்த இரு பகுதியிலும் கூட்டுப்படைக்கும் தலிபான்களுக்கும் இடையே அவ்வப்போது கடும் துப்பாக்கிச் சண்டை நடந்து வருகிறது.

இதன்போது தலிபான்கள் பலத்த தேசத்தை சந்தித்துள்ளனர் என்று அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஓராண்டில் கூட்டுப்படை மேற்கொண்ட நடவடிக்கையில் 24 மணி நேரத்தில் அதிகமான தலிபான்கள் கொல்லப்பட்டிருப்பது இதுவே முதல் தடவை என்றும் அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சகம் கூறியுள்ளது. (ஓ-6)

# கிரேக்க பிரதமராக ஜோர்ஜ் பபன்ட்ரேயு பதவியேற்பு



கிரேக்க பிரதமராக பஸோக் கட்சியின் தலைவர் ஜோர்ஜ் பபன்ட்ரேயு நேற்று முன்தினம் பதவியேற்றார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பொதுத் தேர்தலில் பஸோக் கட்சி 44 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றி யீட்டிய்தையடுத்தே அவரது பதவியேற்பு வைபவம் இடம் பெற்றது.

முன்னாள் பிரதமர்களின் மக னும் பேரனுமான ஜோர்ஜ் பபன்ட் ரேயு (வயது 57)

எதென்ஸிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற வைபவத்தில் பதவியேற்றார். இத்தேர்தலில் கொஸ்தாஸ் கரன் மன்லிஸின் புதிய ஜனநாயகக் கட்சி 33.5. சதவீத வாக்குகளைப் பெற்றது.

தேர்தல் வெற்றியையடுத்து பபன்ட்ரேயுவிபரிக்கையில் எம்மால் திட்டமிடப்பட்ட எந்தவொரு விடயமும் இலகுவானதல்ல நாம் அதற்காக கடுமையாகப் பாடுபடவேண்டியுள்ளது என்று கூறினார். (ஓ-6)




# இவ்வருட பௌதிகவியலுக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது

டிஜிட்டல் புகைப்பட தொழில் நுட்பத்தை உருவாக்கிய மற்றும்கண்ணாடி யிழைவலையமைப்பு மூலம் உலகத் தகவல் தொடர்புகளை இணைக்க உதவிய பிரிட்டன், அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த மூன்று விஞ்ஞானிகளுக்கு இவ் வருடத்துக்கான பௌதீகவியலுக்கான நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

கண்ணாடி இழையின் ஊடான ஒளியின் தொலைதூர பரிமாற்றத்தில் படைத்த புதுமைகளுக்காக சார்ள்ஸ் காவோ என்பவருக்கு இந்த பரிசின் அரைவாசியை ஸ்டாக்கோமில் இருக்கின்ற நடுவர்கள் வழங்கியுள்ளனர்.

அதேவேளை டிஜிட்டல் பிம்ப உணரி குறித்த கண்டுபிடிப்புக்காக அடுத்த அரை வாசிப் பகுதி வில்லார்ட் போயல்மற்றும் ஜோர்ஜ்ஸ் மித் ஆகியோருக்கு வழங்கப்பட்டது. (ஓ-6)

## அல்-குவைதா தலிபான்களை ஒழிக்கும் வரை

# ஆப்கானிஸ்தானிலிருந்து படைகளை வாபஸ்பெற மாட்டோம் -அமெரிக்கா

(வோஷிங்டன்)

ஆப்கானிஸ்தான் பாகிஸ்தான் எல்லைப் பகுதி நவீன காலத்து புனித போர் மையமாக உள்ளது. எனவே ஆப்கானிஸ் தானிலிருந்து படைகளை வாபஸ் பெறும் திட்டமில்லை என அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ராபர்ட் கேட் தெரிவித்துள்ளார்.

கடந்த 2001ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தான் மீது தாக்குதல் நடத்தி தலிபான் ஆட்சியை வீழ்த்திய அமெரிக்க மற்றும் நேட்டோ படைகள் தொடர்ந்து அந்நாட்டில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளன. அமெரிக்கப் படைகளின் தாக்குதலை சமாளிக்க முடியாத தலியான்கள் பாகிஸ்தான் எல்லையில் தஞ்சம் புகுந்து தற்போது பாகிஸ்தானை ஆட்டி படைக்கும் நிலைக்கு சென்றுள்ளனர்.

இதனால் தலிபான்களை ஒடுக்க அமெரிக்க அரசு பாகிஸ்தானுக்கு இராணுவ உதவிகளை அளித்து வருகிறது. ஆப்கானிஸ் தானில் அதிபர் ஹமீத் கர் சாய் இரண்டாவது முறையாக அதிபராகியுள்ளார்.


அமெரிக்க அதிபர் புஷ் காலத்தில் அனுப்பப்பட்ட படைகள் தொடர்ந்து அங்கேயே இருப்பதா அல்லது வாபஸ் பெறு வதா என ஒபாமா அரசு ஆலோசனை செய் த்து. இது குறித்து அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் ராபர்ட் கேட் கூறுகையில்,

அமெரிக்கா, ஆப்கானிஸ்தான் மீது தாக்குதலை நடத்தியிருக்காவிட்டால் தலிபான்கள் ஆதிக்கம் அதிகமாகியிருக்கும். அல்-குவைதா பயங்கரவாத அமைப்பு பல மடங்கு வளர்ந்து இருக்கும்; அவர்களது நடவடிக்கைகள் பல நாடுகளில் பரவியிருக்கும்; பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் எல்லை புனித போரின் மையமாக மாறும் நிலை உள்ளது.

எனவே அல்-குவைதா மற்றும் தலிபான்களை ஒழித்துக் கட்டும் வரை ஆப்கானிலிருந்து அமெரிக்கப் படையை வாபஸ் பெறும் திட்டம் இல்லை. இதை பாகிஸ்தானிடம் தெளிவுபடுத்தியுள்ளோம் இவ்வாறு ராபர்ட் கேட் கூறியுள்ளார். (ஓ-6)

# தலாய்லாமாவை சந்திப்பதை தாமதப்படுத்தியதன் மூலம் சீனாவின் அழுத்தத்திற்கு அடிபணிந்துள்ளார் ஒபாமா

## அமெ. மனித உரிமை குழுக்கள் குற்றச்சாட்டு



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தனது நாட்டுக்கு விஜயம் செய்துள்ள ஆன்மீகத் தலைவர் தலாய்லாமாவை சந்திப்பதை தாமதப்படுத்தியதன் மூலம் சீனாவின் அழுத்தத்திற்கு அடிபணிந்துள்ளதாக குற்றஞ்சாட்டப்படுகிறது.

தான் எதிர்வரும் நவம்பர் மாதம் சீனாவுக்கு விஜயம் செய்யும் வரை தலாய்லாமாவை சந்திக்கப் போவதில்லை என பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் அமெரிக்க ஜனாதிபதி பொருளாதார விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருவதாக மனித உரிமை செயற்பாட்டாளர்களும் சில அமெரிக் பாராளுமன்ற உறுப்பினர்களும் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

எனினும் இக் குற்றச் சாட்டுகளை வெள்ளை மாளிகை மறுத்துள்ளது.

1950 ஆம் ஆண்டு தீபெத்தை கைப்பற்றிய சீனா தலாய்லாமாவை ஒரு பிரிவினை வாதியாக கருதியது.

இந் நிலையில் தலாய்லாமாவை ஏனைய நாடுகள் சந்திக்கக் கூடாது என சீனா கோரி வருகிறது.

1959 ஆம் ஆண்டு எழுச்சிக்கான முயற்சியொன்று சீனப்படையினரால் முறி யடிக்கப்பட்டதையடுத்து தலாய்லாமா இந்தியாவுக்கு சென்று நாடு கடந்த நிலையில் வாழ ஆரம்பித்தார்.

ஆன்மீக தலைவரை சந்திப்பதை தாமதப்படுத்துவதன் மூலம் வெள்ளை மாளிகை சீனாவுக்கு அடிபணிந்துள்ளதாக குடியரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் இல்லேனா ரொஸ் லெஹ்தினன் குற்றஞ்சாட்டி அறிக்கை வெளியிட்டுள்ளார். (ஓ-6)

# நேபாளத்தில் நிலச்சரிவில் சிக்கி 12 பேர் உயிரிழப்பு

(காட்மாண்ட்)

நேபாள நாட்டில் உள்ள மலையோர கிராமங்களில் கடந்த 3 நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

இந்த மழை காரணமாக மேற்கு நேபாள நாட்டின் பாடல் துரா மாவட்டத்தில் உள்ள மாஸ்டண்டு கிராமத்தில் நேற்று முன்தினம் அதி காலை 3 மணி அளவில் நிலச் சரிவு ஏற்பட்டது.

இந்த நிலச்சரிவில் அந்த பகுதிகளில் உள்ள 2 வீடுகள் இடிந்து விழுந்தன. வீடுகளுக்குள் தூங்கிக்கொண்டிருந்த 12 பேர் மணலில் உயிருடன் புதையுண்டனர்.

இது குறித்து துணை பொலிஸ் சூப்பிரண்டு சக்ரா புகஹதூர் சிங் கூறுகையில் இடிந்த ஒரு வீட்டில் இருந்து 5 உடல்கள் மீட்கப்பட்டன. புதையுண்ட மற்றொரு வீட்டின் மணலை அகற்றியபோது மணலில் புதைந்து கிடந்த 7 உடல்கள் மீட்கப்பட்டன என்று அவர் தெரிவித்தார். (ஓ-6)

# ருவாண்டாவில் தேடப்பட்டு வரும் முக்கிய குற்றவாளிகளில் ஒருவர் கைது

(ருவாண்டா)

ருவாண்டாவில் 1994 ஆம் ஆண்டு நடந்த இனப்படுகொலை தொடர்பில் தேடப்பட்டு வந்த முக்கிய குற்றவாளிகளில் ஒருவர் உகாண்டாவில் கைது செய்யப்பட்டிருக்கிறார். இடெல்போன்செ. நிசெயிமன என்கிற இந்த மனிதர் தான்சானியாவில் நடக்கும் ருவாண்டா இனப்படுகொலை தொடர்பான தீர்ப்பாயத்திற்கு கொண்டு செல்லும் வகையில் நாடு கடத்தப்பட்டு வருகிறார். இந்த தீர்ப்பாயத்தில் முக்கிய குற்றவாளியாக வர்ணிக்கப்படுகிறார்.

ருவாண்டாவின் டுட்சி அரசியையும்டுட்சி இன பேராசிரியர்களையும் கொல்வதற் கான ஆணைகளை இவர் பிறப்பித்ததாக குற்றம் சாட்டப்படுகிறது. டுட்சி இன மக்கள் தப்பிச் செல்ல முடியாமல் சாலைகளில் தடுப்புக் களை ஏற்படுத்தி அவர்களை பிடித்துக்கொல்வதற்கும் இவர் ஆணையிட்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவரது கைதை வரவேற்றிருக்கும் ருவாண்டா அரசின் சார்பில் பேச வல்ல அதிகாரி இந்தநபர் ருவாண்டாவில் வழக்குகளை சந்திக்கவேண்டும் என்றும் கூறியுள்ளார். (ஓ-6)

# ஐ.நா. அலுவலகத்தின் மீதான தாக்குதலுக்கு தலிபான்கள் பொறுப்பேற்பு

பாகிஸ்தானில் உள்ள ஐ.நா. அலுவலகத்தின் மீது தாக்குதல் நடத்தியதற்கு தலிபான்கள் பொறுப்பேற்றுள்ளனர். பாகிஸ் தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் கடந்த திங்கட்கிழமை ஐ.நா உணவு திட்டத்துறை அலுவலகத்தின் மீது தற்கொலை படை தாக்குதல் நடந்தது.

இந்தச் சம்பவுத்தில் ஒரு ஈராக்கியர் உட்பட ஐ. நா ஊழியர்கள் ஐந்து பேர்கொல்லப்பட்டனர். இந்த சம்பவத்துக்கு நாங்கள் தான் காரணம் என தலிபான்கள் அறிவித்துள்ளனர். பாகிஸ்தானில் செயல்படும் தலிபான் அமைப்பான தேரிக்-இ. தலிபான் அமைப்பின் தகவல் தொடர்பாளர் அசம்தாரிக் குறிப்பிடுகையில் அமெரிக்காவின் அடிமை ஐக்கிய நாட்டு சபை. எனவே தான் இஸ்லாமாபாத்தில் உள்ள ஐ.நா கிளை அலுவலகம் மீது தாக்குதல்நடத்தினோம் என்றார். இஸ்லாமாபாத்தில் உள்ள ஐ. நா அலுவலகத்தின் மீது நடந்த தாக்குதலுக்கு ஐ.நா பொதுச் செயலர்பான கீமூன் கண்டனம் தெரிவித்துள்ளார். இது குறித்து ஜெனிவாவிலிருந்து பான்-கி-மூன் குறிப்பிடுகையில் பாகிஸ் தானில் பசியால் வாடும் மக்களின் துயர் துடைக்கும் பணியில் ஈடுபட் டுள்ள ஐ.நா உணவு திட்டத்துறை அலுவலகத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் கொடுமை யானது என்றார். (ஓ-6)

# விஜய நகரப் பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும்

**20**

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

இக்கால நடனப் பெண்களின் ஆடை, அலங்கார அமைப்பும், ஒப்பனையும், பல்லவர், பாண்டியர்,சோழர் கால சிற்பங்களில் காணப்படுவதிலிருந்து பெரிதும் வேறுபட்டுள்ளன.இவை 16-18 ஆம் நூற்றாண்டுகளில் நாட்டுப்புற மக்கள் மற்றும் நடனப் பெண்களின் சமுதாய அமைப்பைப் பிரதிபலிக்கின்றன.

இந் நாட்டியப் பெண்கள் ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டனர் என்று கருதுவது மிகையன்று.நெற்றியில் ஆரம் தொங்கு வது போன்றும் கழுத்தில் முத்துப் பதித்த நகைளும்,மொத்தத்தில் ஆடும் அணங்கு களின் உடலை ஆடை போன்று தலைமுதல் கால்வரை அலங்கரிக்கின்றன.

இதனை ஓவியங்க ளிலும் சிற்பங்களிலும் எழிலாகக் காட்டியுள்ளனர்.

இவ்வாறு விசயநகர -நாயக்க மன்னர்கள் தங்களது நிர்வாகத்திலும், ஆட்சியிலும், பண்பாட்டிலும் முந்தைய அரசுகளிலிருந்து விரிவுபடுத்தியும்,வேறுபட்டும் இயங்கினர். அவர்கள் தென்னகம் முழுவதையும் தம் ஆளுகையின் கீழ்க் கொண்டிருந்ததால் கலப்புப் பண்பாட்டுக்கூறுகள் தவிர்க்க முடியாதனவாயின.

இதனால் சாதிக்கடுமையும்,பலதார மணமும் பல்கிப் பெருகின.

அவற்றைக் களைய கிருத்துவ பாதிரியார்களும் அறிவுறுத்தியதாக அவர்தம் கடிதங்கள் கூறுகின்றன.

இலக்கியத் துறையில் மறுமலர்ச்சி ஏற்பட்டது.

இதுவரை இருந்ததை விட இவர்கள் காலத்தில் மன்னரும் மற்றோ ரும் இலக்கியப் படைப்பாளிகளாகத் திகழ்ந்தனர்.

கலைத்துறை யில் விரிவாக்கமும் மாற்றங்களும் ஏற்படுத்தப்பட்டன. சமயத் தொடர்பான கலைகள் மட்டுமே என்ற நிலை மாறி சமுதாயத்தின் அன்றாட வாழ்க்கை தொடர்பான நிகழ்வுகளுக்கு உரிய இடமாகக் கோயில்களும், வாழ்க்கையைச் சித்தரிக்கின்ற ஊடகமாகச் சிற்பங்களும், ஓவியங்களும் திகழ்ந்தன.


இசையும், நாட்டிய மும் கூட ஆதரவு பெற்றன.பண்டைய உன்ன தத் தமிழகக் கலைவரலாற்றின் இறுதிக்காலக் கட்டமாக அவர்களது காலம் விளங்கியது. (தொடரும்)

விஜயநகர நாயக்கர் கால கலைப்படைப்புக்கள்

திருப்பெருந்துறை நாயக்கர் கால ஓவியம்



மதுரை - பொற்றாமரைக் குளமும் கோபுரங்களும்




நெத்திச் சுட்டியும் காதுகளில் வளையம், தோடு, ஜிமிக்கி போன் றவையும், இஸ்லாமியப் பண்பாட்டுத் தாக்கத்தைக் காட் டும் மூக்குத்தியும், கைவளைகளும், ஒட்டியாண்மும், கால்களில் தண் டையும் கொலு சும், தலையில் பக்கவாட்டில் கொண்டையிட்டு

பேராசிரியர் கு. சேதுராமன்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச்சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

**143**



ஒபாமா "நான் தனிநபரின் வெற்றியையும் சமூக ஒருமைப்பாட்டையும் நிர்ணயிப்பதில் கலாசாரத்துக்கு இருக்கும் சக்தியை நம்புகிறேன். கலாசாரக் காரணிகளை அலட்சியம் செய்வது ஆபத்தானது. ஆனால் அவற் றிற்கு ஒரு உருவகம் கொடுப்பதில் அரசா்ங கத்திற்கு பெரும் பங்கு உண்டு என்பதை நம்புகிறேன்" என்கிறார்.

ஏன்தான் அரசியல்வாதிகளால் ஒளிவு மறைவின்றி பேச முடிவதில்லை என்பதையிட்டு ஒபாமா அடிக்கடி ஆதங்கப்படுகிறார். தற்கால அரசியல் நடவடிக்கைகளில் விழுமியங்கள் வற்றிப் போய்விட்டன.

அரசியல்வாதிகள் உண்மைக்குப் புறம்பான வகையில் மற்றவர்களைப் பற்றி புனைந்து கட்டும் கதைகள் தங்களுக்கு நன்மை தருவதாக எண்ணுகின்றனர். உதாரணமாக தன் அனுபவம் ஒன்றைத் தருகிறார்.

யு.எஸ்.செனட்டர் பதவிக்கு ஒபாமா போட்டியிட்டார். அவரை எதிர்த்து நின்ற குடியரசுக் கட்சிக்காரர் ஒபாமா எங்கு சென்றாலும் அவரைப் பின் தொடர்ந்து படம் எடுக்கும்படி ஒரு நபரை பணிக்கமர்த்தினார்.

இது அமெ ரிக்க அரசியலில் ஏற்புடைய நாகரிகமானா லும் அந்த ஆள் அளவுக்கு மீறிச் செயல் பட்டார். ஒபாமாவை 5 அடி தூரத்தில் நின்று படம் எடுத்தார்.

தொலைபேசியில் பேசும்போதும் மனைவி மக்களுடன் தனித்து இருக்கும் போதும் அவரை அந்த ஆள்விட்டபாடில்லை.

அதாவது ஒபாமாவின் தனி வாழ்க்கையில் குறுக்கிடும் அளவுக்கு அந்த நபரின் நடத் தைகள் அத்துமீறின.ஆரம்பத்தில் அவருடன் அன்பு காட்டி அவருடைய செயலுக்கான காரணம் பற்றி அறிய முயன்றார். ஆனால் அவர் தனது பெயர் ஜஸ்ரின் (JUSTIN) என்று மாத்திரம் கூறிவிட்டு மௌனமாகிவிட்டார்.

அவரின் எஜமானனுக்கு அவரின் அடாவடித்தனம் பற்றி அறிவிக்க முற்பட்டபோது அந்த ஆள் தனது முதலாளியின் தொலைபேசி இலக்கத்தைத் தந்தார்.எந்த நேரம் வேண்டுமானாலும் ஒபாமா தாராளமாக அவருடன் பேசலாம் என்றும் சொல்லி வைத்தார்.

ஒபாமாவுக்கு போதுமென்றாகிவிட்டது. ஜஸ்ரின் பின்தொடர ஒபாமா செனட் சபைக் கட்டடத்தின் மத்தியில் உள்ள ஊடக அறைக்குள் நுழைந்தார்.அங்கிருந்த ஊடக நிருபர்களை அழைத்து ஜஸ்ரினை அறிமுகம் செய்து வைத்தார்.

" இவரைத்தான் (Ryan) றியன் என்பவர் என்னைப் பின்தொடருமாறு பணித்துள்ளார். நீங்களும் அவரை அறிந்துகொள்ளுங்கள்" என்று அறிமுகம் செய்ததும் அத்தனை ஊடகவியலாளர்களும் ஜஸ்ரினை துருவித்துருவி கேள்விகள் கேட்டு துளைத்தார்கள்.

இதேநேரத்தில் பத்திரிகை செய்தியாளர்கள் கமராக்களுடன் அங்கு வந்து ஜஸ்ரின் படம் எடுப்பதையும் சேர்த்து படங்கள் எடுத் தனர். சிறைக் கைதியைப் போன்று ஜஸ்ரின் தன்னைப் பற்றி எல்லாவற்றையும் அவிழ்த்துவிட்டார்.

அன்று மாலை ஜஸ்ரினின் கதைகள் உள்ளூர் ரி.வி., றேடி யோக்களில் ஒளி, ஒலி பரப்பப்பட்டன. அந்த வாரம் முழுவதும் நாடு பூராகவும் பரப்பப் பட்டன.

மக்களுக்கு சுகநலத் திட்டம் அல்லது மத்திய கிழக்குப் பிரச்சினைகள் தெரியாவிட்டாலும் ஒபாமாவின் எதிரியின் பண்பற்ற செயல், விழுமியங்களை விழுங்கிவிட்டமை மக்களின் கோபத்தைக் கிளறிவிட்டது.

ஒரு அரசியல்வாதி பெறுமதி (விழுமியங்கள்) உள்ளவனா? என்பதை மக்கள் எப்படி மதிப்பீடு செய்கிறார்கள் என்பது முக்கியமானது.

### ஜம்பொன்

அவனுடைய நாளாந்த நடவடிக்கைகளுக்கும் அவன் தேர்தலில் ஜெயிப்பதற்குக் கையாளும் நடவடிக்கைகளுக்கும் இடையில் ஏற்படும் இடைவெளி அவனைப் பற்றி மக்களுக்கு காட்டிக்கொடுத்து விடும்.அரசியல்வாதி எதிர்நோக்க வேண்டிய ஆபத்து ஒன்றுண்டு.

தனது கொள்கைகளை கைவிட்டு மக்களின் அபிப்பிராயத்திற்கு தலை குனிந்து போக வேண்டிய கட்டங்கள் அவனுக்கு அடிக்கடி ஏற்படலாம். (தொடரும்)

# சிறுவர்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களை ஒழிக்க அரசு நடவடிக்கை எடுக்கும்

## ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு



(கொழும்பு)
கிராமியச் சிறுவர்கள் கஷ்டங்களை எதிர்நோக்க இடமளிக்கப் போவதில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிறுவர்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள் அனைத்தையும் பொறுப் பேற்று அவற்றை ஒழிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

மாத்தறை திக்வெல்ல மத்திய மகா வித்தியாலயத்தின் புதிய கட்டடத்திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

கடந்த 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியாக முதலாவதாக வந்த ஹம்பாந்தோட்டை விஜயபா வித்தியாலய மாணவன் மற்றும் தமிழ்மொழி மூலம் முதலாவதாக வந்த யாழ்ப்பாண மாணவனைச் சுட்டிக் காட்டிய ஜனாதிபதி கிராமியச் சிறுவர்களிற்கு தற்போது சமகல்வி உரிமை வாய்ப்பு கிட்டியுள்ளதாகத் தெரிவித்தார்.

வர்த்தக மயப்படுத்தப்பட்ட சமூகத்தில் பெற்றோர்கள் தொடர்ச்சியாக பிள்ளைகள் குறித்து ஆராய்வது அவசியமானது என அவர் சுட்டிக் காட்டினார். எதிர்கால சந்ததியினர் பெரியவர்களிற்கு மரியாதை செலுத்தும், தாய் நாட்டின் மீது அன்பு செலுத்தும் குணம் உடையவர்களாக உருவாக வேண்டும் என் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நற்குணமுடைய எதிர்கால சந்ததியை உருவாக்கும் பணியில் ஆசிரியர்களிற்கு பாரிய பொறுப்பு இருப்பதாகவும் ஆசிரியர்கள் பொறுப்புடன் தமது சேவையை நாட்டிற்காக வழங்க வேண்டிய காலம் தோன்றியுள்ளதாகவும் ஜனாதிபதி அங்கு மேலும் தெரிவித்தார். (ஓ-14)

# முகாம் மக்களை பராமரிக்க நிதி கோருகிறது அரசு

## அடுத்த வருடத்துக்கு நிதி இல்லையாம்



(கொழும்பு)
வன்னியில் நலன்புரி முகாம்களுக்குள் உள்ள தமிழ் மக்களை தொடர்ந்தும் வைத்திருப்பதற்கு அனைத்துலக நிதி வழங்குநர்களிடம் இருந்து மேலும் நிதி உதவிகளை இலங்கை அரசு கோரியுள்ளது.

அடுத்த வருடம் இந்த முகாம்களை நிர்வகிப்பதற்குத் தேவையான பணத்திற்காக புதிய கோரிக்கையை விடுத்துள்ளோம். இடம்பெயர்ந்த மக்களின் வாழ்வாதாரம் மற்றும் அவர்களை மீளக்குடியமர்த்தும் பணிகளுக்காக இந்த நிதி தேவையாக இருக்கின்றது என மனித உரிமைகள் மற்றும் பேரிடர் நிவாரண அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் பேசுகையில் அமைச்சர் இதனைக் கூறினார். ஐக்கிய நாடுகள் சபையைச் சேர்ந்த நிறுவனங்கள் அனைத்துலக செஞ்சிலுவைக் குழு இராஜதந்திரிகள் ஆகியோருடன் இலங்கை பிரதிநிதிகள் நடத்திய கூட்டத்திற்குச் சற்று முன்னதாக அவர் இதனைக் கூறினார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் முடிவை நெருங்கிக் கொண்டிருந்த மே மாதத்தில் இடம்பெயர்ந்த மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக 225 மில்லியன் டொலர் பணத்தை உதவியாக வழங்குவதற்கு அனைத்துலக நிதி வழங்குநர்கள் ஒத்துக் கொண்டிருந்தனர்.

உறுதி வழங்கப்பட்டதில் 195 மில்லியன் டொலர் நிதி உதவிகள் இதுவரை வழங்கப்பட்டு விட்டன என அமைச்சர் சமரசிங்க கூறினார்.

அடுத்த வருடத் தேவைகளுக்காக எவ்வளவு நிதி வேண்டும் என்பதைக் கூறுவதற்கு அமைச்சர் மறுத்துவிட்டார். ஆனால் இந்த வருடத்தில் உறுதியளிக்கப்பட்ட 225 மில்லியன் டொலரை விட மிக மிக அதிகமான உதவிகள் வேண்டும் என்று மட்டும் அவர் குறிப்பிட்டார். (ச-5)

# ஊடகவியலாளர் திஸ்ஸ நாயகத்தை மங்கள சமரவீர சிறையில் பார்வையிட்டார்



(கொழும்பு)
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர 20 ஆண்டுகால கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள திஸ்ஸ நாயகத்தை பார்வையிடச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஊடகவியலாளர் ஜே.எஸ். திஸ்ஸநாயகம் மற்றும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய உதுல் பிரேமரட்ன ஆகியோரை மங்கள சமரவீர சிறைச்சாலையில் சந்தித்து பேசியதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஜனநாயகத்தை நேசிக்கும் அனைத்து சக்திகளும் ஒன்றிணைந்து ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அடக்குமுறையை முறியடிக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

தசாப்த காலமாக மனித உரிமைகளுக்காக போராடிய ஊடகவியலாளர் ஜே.எஸ். திஸ்ஸநாயகம் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள சம்பவம் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ள அவர் அரசாங்கத்தின் சிரேஷ்ட தலைவர்களும் கையாட்களும் பெருந்தொகையான பணத்தை கொள்ளையிட்டு வருவதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

எதிர்காலத்தில் சிற்பிகளான பல்கலைக்கழக மாணவர்கள் வாயில் கதவை உடைத்தார்கள் என்ற காரணத்திற்காக சிறைச் சாலைகளில் அடைப்பது எந்த வகையில் நியாயமாகும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் இலங்கையின் ஜனநாயகம் எதனைநோக்கி செல்கின்றது என்பதன்ன தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)




ஆசிரியர்
வலம்புரி
யாழ்ப்பாணம்.

## வடமாகாண உள்ளூராட்சி கண்காட்சி - 2009

வடமாகாண உள்ளூராட்சி கண்காட்சி ஒன்று யாழ்ப்பாணத்தில் ஒக்டோபர் மாதம் நடாத்தப்படவுள்ளதை தாங்கள் அறிந்திருப்பீர்கள். ஒக்டோபர் 10,11 ஆம் திகதிகளில் நடாத்த தீர்மானிக்கப்பட்ட இக் கண்காட்சி அமைச்சர்கள், ஆளுநர் போன்றோரின் வசதி கருதி ஒக்டோபர் 18,19 ஆம் திகதிகளில் நடாத்துவதற்கு பிற்போடப்பட்டுள்ளது.

18 ஆம் திகதி கண்காட்சிக்கு 17 ஆம் திகதியே ஆயத்தம் செய்ய வேண்டியிருக்கும். அன்றைய தினம் தீபாவளி, கேதாரீஸ்வர விரத பூர்த்தி விரதகாரர் அன்று உபவாசம், அடுத்த நாள் காலை - பாரணை உள்ளூராட்சித் திணைக்களத்தில் வேலை செய்பவர்களில் 50% ஆனவர்கள் விரதகாரர்களாக இருப்பர்.

இதனால் அவர்கள் எவ்வாறு இந்தக் கண்காட்சியில் கலந்து சிறப்பிக்க முடியும். கலந்து கொள்ளாமலும் இருக்க முடியாது. ஒரு மதத்தைச் சார்ந்தவர்களின் உரிமையில் தலையிடுவதாகவும் இது அமைகின்றது.

எனவே, இது தொடர்பில் உரியவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

நலன்விரும்பி.

# முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களின் பெயர் விபரங்களை உடனடியாக வெளியிடுக

## மனோ கணேசன் வலியுறுத்து



(கொழும்பு)
வன்னித் தடுப்பு முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் பெயர் விபரங்களை உடனடியாக வெளியிடுமாறு பொதுமக்கள் கண்காணிப்பு ஆணையம் இலங்கை அரசிடம் வலியுறுத்தி உள்ளது.

முகாம்களில் பதிவு செய்யப்பட்டு விட்டார்கள் என அரசு அறிவித்துள்ள 1 இலட்சத்து 50 ஆயிரம் பேரினதும் அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டாயிற்று என்று கூறப்படும் 1 இலட்சத்து 10 ஆயிரம் பேரினதும் பெயர்கள், முகவரிகள், தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் என்பன உடன் வெளியிடப்பட வேண்டும் என்று ஆணையத்தின் தலைவரும் மேல் மாகாண மக்கள் முன்னணி தலைவருமான மனா கணேசன் வலியுறுத்தினார்.

இடம்பெயர்ந்தவர்களின் விபரங்கள் அடங்கிய இணையத்தளம் ஒன்றை உருவாக்குவதற்கு இலங்கை அரசுடன் இணைந்து எதிர்க்கட்சிகள் பணியாற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். அனைத்துலக சமூகத்தின் வலியுறுத்தல்படி முகாம்களில் உள்ள மக்களின் விபரங்கள் பதியப்பட்டிருப்பது மற்றும் பெரும்பாலானவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டிருப்பதற்கு அரசுக்கு தனது பாராட்டுக்களை தெரிவித்த அவர் எப்படி இருப்பினும், இந்த விபரம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவருக்கும் தெரியாமல் இருந்தமை ஆச்சரியம் தந்தது எனவும் கூறினார்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவுவதற்காக 54 அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் அனுமதிக்கப்பட்டிருப்பது எமக்கு ஆச்சரியம் அளிக்கின்றது. அதே சமயம் அந்த மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மனித உரிமைகளுக்கான நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மக்களைச் சந்திப்பதற்கான அனுமதி வழங்கப்படவில்லை.

இடம்பெயர்ந்த மக்களின் விபரங்கள் அடங்கிய இணையத்தளம் ஒன்றை உருவாக்குவதற்கு அரசுடன் இணைந்து பணியாற்ற இருக்கின்றோம். இந்த முயற்சி அனைத்துலக சமூகத்திற்காக மட்டுமல்ல தமது நெருங்கிய உறவுகளின் விதி என்ன என அறிய விரும்பும் இலட்சக்கணக்கான இலங்கை மக்களுக்காகவும் தான் மேற்கொள்ளப்படுகின்றது என்றார் மனோ கணேசன். (ஓ-6)

# கொழும்பு நகர பாதுகாப்பு தகவல்களை புலிகளுக்கு வழங்கிய பொலிஸ் அதிகாரி கைது

(கொழும்பு)
கொழும்பு நகர் தொடர்பான பாதுகாப்பு தகவல்களை விடுதலைப் புலிகளுக்கு வழங்கிய பொலிஸ் அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த பொலிஸ் அதிகாரி வெளிநாட்டில் வசித்து வந்ததாகவும் அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த போது அவரைக் கைது செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த அதிகாரி பொலிஸ் சேவையிலிருந்து பிரபுக்கள் பாதுகாப்புப் பிரிவிற்கு இடமாற்றம் கோரியிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. பல்வேறு ஊழல் மோசடிகளில் குறித்த பொலிஸ் அதிகாரி ஈடுபட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளுடனான தொடர்பு அம்பலமாகும் என்ற அச்சம் காரணமாக குறித்த பொலிஸ் அதிகாரி நாட்டை விட்டு வெளியேறியிருந்தாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பை அண்டிய பொலிஸ் நிலையம் ஒன்றில் அவர் கடமையில் ஈடுபட்டிருந்த போது புலிகளுக்கு தகவல்களை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

# ஏ.ஆர்.ரகுமானின் பிரமாண்ட இசை நிகழ்ச்சி சென்னையில்



(சென்னை)

ஒஸ்கார்விருது பெற்ற இசை அமைப்பாளர் ஏ.ஆர். ரகுமானின் பிரமாண்ட இசை நிகழ்ச்சி சென்னையில் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

சக்தி அறக்கட்டளை மற்றும் ஏ.ஆர்.ரகுமான் அறக்கட்டளை ஆகியவற்றுக்கு நிதி திரட்டுவதற்காக ஒஸ்கார் விருது பெற்ற ஏ.ஆர். ரகுமானின் ஜெய் ஹோ உலகப் பயணத்தின் இசை நிகழ்ச்சி சென்னையில் நடக்கிறது.

இதற்காக அங்கு 10ஆயிரம் சதுர அடியில் பிரமாண்ட மேடை அமைக்கப்படு கிறது. இந்த இசை நிகழ்ச்சியை 30 ஆயிரம் பேர் வரை பார்ப்பதற்கு வசதி செய்யப்படுகிறது.

இந்த இசை நிகழ்ச்சியில் ஏ.ஆர். ரகுமானின் சமிபத்தியப்பாடல்கள் மற்றும் ஹரிகரன் , சிவமணி, சாதனாசர்க்கம், பிளேஸ் பென்னி தயால் உள்பட இந்தியாவில் உள்ள முக்கிய பாடகர்களோடு 80ற்கும் மேற்பட்ட இசைக் கலைஞர்கள் பங்கேற்கிறார்கள்.

இது குறித்து மார்க் குழுமத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ஜி.ஆர்.கே. ரெட்டி தெரிவிக்கையில் ,

இசை வல்லுநர் ஏ.ஆர்.ரகுமான் மற்றும் சக்தி அறக்கட்டளையுடன் இத்தகைய நல்ல நோக்கத்திற்காக கை கோர்ப்பது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது.

ஒஸ்கார் விருதினை வென்றதனால் மட்டுமல்லாது இசை உலகத்திற்கு அற்புத மான பங்களிப்புகளை வழங்கியதன் மூலம் ஏ.ஆர். ரகுமான் சென்னையையும் மற்றும் ஒவ்வொரு இந்தியனையும் பெருமை கொள்ளச் செய்துள்ளார்.

இந்த இசைநிகழ்ச்சியின்வழியாக சென்னை இசையை ஆர்வலர்களுக்கு அவரது இசையை வழங்குவது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியாகும்.

மாபெரும் இசைக் கலைஞரை கௌர விப்பதற்கான சிறந்த வழி இதுவே. இவ்வாறு அவர் கூறினார். ஒஸ்கார் விருது பெற்ற பின் ஏ.ஆர்.ரகுமான் சென்னையில் நடத்தும் முதல் இசை நிகழ்ச்சி இது வாகும் என்றார். (ஓ-6)

# பா.ம.க. தலைமையில் மூன்றாவது அணி அமைப்போம்

## இராமதாஸ் தெரிவிப்பு



(நாகர்கோவில்)

பா.ம.க. தலைமையில் 3 ஆவது அணி அமைப்போம் என்று பா.ம.க நிறுவனர் டாக்டர் இராமதாஸ் தெரிவித்துள்ளார்.

தமிழக மாணவர் சங்க மாநாட்டில் கலந்து கொள்வதற்காக டாக்டர் இராமதாஸ் நேற்று முன்தினம் காலை நாகர்கோவில் வந்தார்.

அங்கு அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்,

பா.ம.க அ.தி.மு.க கூட்டணியை விட்டு வெளியே வந்ததும் பத்திரிகைகளில் செய்தி வெளியிட்டுள்ளனர். அத்துடன் அடிக்கடி கூட்டணி மாற்றம் என்றும் செய்தி வெளியிட்டுள்ளனர். 1967 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் கூட்டணி யுகம் தொடங்கியது. எந்த கட்சியும் தனித்து போட்டியிட வில்லை. தமிழக அளவிலும், இந்திய அளவிலும் ஒரு தேர்தலில் கூட்டணி வைக்கும் கட்சி அடுத்த தேர்தலில் அந்த கூட்டணியை விட்டு வெளியே சென்று விடுகிறது.

நாங்கள் எடுத்த முடிபு சுய மரியாதைக்கு குந்தகம் வந்த போது ஒரு கூட்டணியில் இருக்க முடியாது என்ற நிலையில் கூட்டணியில் இருந்து வெளியே வர முடிபு எடுத்தோம். நான் எடுத்தது சுய நலத்தின் அடிப்படையில் இல்லை. இது எங்கள் கட்சிக்கு மட்டும் புதிது இல்லை பா.ம.க. தொடங்கப்பட்ட பிறகு 1989, 1991, 1996 தேர்தல் வரை தனித்து நின்றோம். 1996 ஆம் ஆண்டு 4 இடங்களில் வெற்றி பெற்றோம். அதன்பிறகு தி.மு.கவுடன் கூட்டணி அமைக்க விரும்பி கோபாலபுரம் கதவை தட்டுவோம். அவர்கள் போயஸ் தோட்டத்தில் விட்டு விடுவார்கள். இந்த முறையும் அதுதான் நடந்தது. வேறு வழியில்லாமல் போனோம்.

அ.தி.மு.க முன்பை போல் இல்லை. கிளையில் இருந்து மேல் மட்டம் வரை கோஷ்டிகள் உள்ளன. தேர்தலில் பலபேர் காசுக்கு விலை போனார்கள். அ.தி.மு.க மிகவும் பலவீனமான கட்சியாக மாறி விட்டது. தலைமை பண்பு, ஆளுமை பண்பு, அறவே இல்லை.

பா.ம.க தொடங்கி 20 ஆண்டுகள் ஆகிறது. சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகியவற்றை முன் வைத்து மக்களுக்காக போராடி உள்ளோம். இந்த கட்சி தலைமையில் 3-ஆவது அணி அமைய வேண்டும் என்று மக்கள் விரும்பினால், காலத்தின் கட்டாயமாக இருந்தால் அது நடக்கும் என்றார். (ஓ-6)

# சபரிமலையிலுள்ள மூன்று கோவில்களுக்கு தங்கக்கூரை அமைக்க தமிழக பக்தர் தயார்

(சபரிமலை)

சபரிமலையில் கன்னிமூல கணபதி, நாகராஜர் மற்றும் மாளிகைப் புறத்தம்மன் ஆகிய மூன்று கோவில்களின் மேற்கூரைகளில் தங்கம் பொருத்தும் பணி விரைவில் ஆரம்பமாகும்,

கேரளாவில் பிரசித்தி பெற்ற சபரிமலை ஐயப்பன் கோவில் சன்னதி அருகே கன்னி மூல கணபதி, நாகராஜர் மற்றும் மாளிகைப் புறத்தம்மன் ஆகியோருக்கு, தனித்தனி சன்னிதிகள் உள்ளன.

இக்கோவில்களின் மேற்கூரையை தங்கக் கூரையாக மாற்ற முடிபு செய்யப்பட்டுள்ளது. இதை, தமிழகத்தைச் சேர்ந்த பிரபல ஜவுளி வியாபாரி வேண்டுதலாக செய்து தர திருவிதாங்கூர் தேவஸ்தான சபையிடம் கேட்டுள்ளார்.

இதே வியாபாரி கடந்தாண்டு சபரிமலையில் விருந்தினர் மாளிகையில் பழைய அறைகளை மாற்றி புதிய நவீன வசதிகள் கொண்ட அறைகளாக தனது சொந்த செலவில் செய்து கொடுத்துள்ளார்.

அதில் சில பணிகள் தற்போதும் நடந்து வருகின்றன. இப்பணிகள் நிறைவடைந்த பின்னர் தான் மேற்கண்ட மூன்று கோவில் கூரைகளில் தங்கம் பொருத்தும் பணிகளை அவர் ஆரம்பிப்பார் என தெரிகிறது.

சபரிமலையில் ஐயப்பன் கோவில் மேற்கூரையை பெங்களூருவைச் சேர்ந்த யு.பி. குரூப் தலைவர் விஜய் மல்லையா தனது வேண்டுதலுக்காக தங்கக் கூரையாக மாற்றிக் கொடுத்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

தற்போது கன்னி மூல கணபதி, நாகராஜர் ஆகியோரது கோவில் சுவர்கள் பித்தளை தகடுகள் பொருத்தும் பணி நிறைவடைந்துள்ளன.

இது தமிழகத்தைச் சேர்ந்த ஐயப்ப பக்தரது வேண்டுதலுக்காக செய்யப்பட்டது என தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

# மண்டபம் மீனவர்கள் நடுக்கடலில் விரட்டியடிப்பு

(மண்டபம்)


மண்டபம் மீனவர்களை இலங்கை கடற்படையினர் விரட்டி அடித்து எச்சரிக்கை செய்துள்ளனர். மன்னார் வளைகுடாவில் கடந்த திங்கட்கிழமை காற்றின் வேகம் குறைந்திருந்தது. இதைத் தொடர்ந்து இராமேஸ்வரம், பாம்பன், மண்டபம் பகுதி மீனவர்கள் வழக்கம் போல் மீன்பிடிக்க கடலுக்குச் சென்றனர்.

மண்டபம் பகுதி மீனவர்கள் நடுக்கடலில் மீன் பிடித்து கொண்டிருந்தபோது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் மீனவர்களை சுற்றி வளைத்தனர். இப்பகுதியில் மீன் பிடிக்க கூடாது எனவும் எச்சரிக்கை செய்து விரட்டியடித்தனர். இதனால் மீனவர்கள் மீன் பிடிப்பதை நிறுத்தி கரை திரும்பினர். (ஓ-6)




# முகாம் மக்களை விடுவிக்கக்கோரி தமிழக எம்.பிக்கள் சார்பில் பிரதமரிடம் கையளிக்கப்பட்ட மனுவுக்கு நடவடிக்கையில்லை

## திருமாவளவன் தெரிவிப்பு



(சென்னை)

இலங்கை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அகதிகளை விடுவிக்கக் கோரி தமிழக எம்.பி.க்கள் சார்பில் பிரதமரிடம் கையளிக்கப்பட்ட மனு தொடர்பில் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இலங்கை முகாம்களில் உள்ள தமிழ் மக்களை விடுவிக்க கோரியும், தமிழக மீனவர்கள் மீது தொடரும் தாக்குதல்களைக் கண்டித்தும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தமிழத் தேசிய விடுதலைப் பேரவை சார்பில் சென்னையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதற்கு தலைமை தாங்கிய திருமாவளவன் மேலும் தெரிவிக்கையில், 3 இலட்சம் தமிழர்கள் இலங்கையில் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். உலக நாடுகளும் இதனை வேடிக்கை பார்ப்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது. முகாம்களில் குடிநீர் வசதியில்லை. சுகாதாரமில்லை.

இலங்கையில் யுத்தம் முடிபடைந்த பின்னரும் முகாமிற்கு செல்ல பத்திரிகையாளர்களிற்கு அனுமதியில்லை. இதை கண்டித்து எதிர்வரும் 12 ஆம் திகதி மகளிர் அணி சார்பிலும், 13 ஆம் திகதி மீனவர் அணி சார்பிலும் ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளோம்.

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். இது பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டியும் நாங்கள் பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். ஆனால் நடவடிக்கை எதுவுமில்லை.

ஈழத்தமிழர்களை கொச்சைப்படுத்தும் விதமாக தமிழகத்தில் உள்ள இலங்கை துணைத் தூதரக அதிகாரி பேசி வருகிறார். இது கண்டிக்கத்தக்கது. தமிழகத்தில் இலங்கை தூதரகம் இருக்கக்கூடாது. செங்கல்பட்டு முகாம்களில் தங்கியிருக்கும் ஈழத்தமிழர்கள் தண்ணீர் கூட குடிக்காமல் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர் என்றார். (ஓ-6)

# இலங்கை மீனவர்கள் 7 பேர் தூத்துக் குடியில் கைது

(சென்னை)

தூத்துக்குடி அருகே இந்திய கடல் எல்லையில் நுழைந்த இலங்கை மீனவர்கள் 7 பேரை இந்திய கடலோரக் காவல் படையினர் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்துள்ளனர்.

இந்திய கடலோர காவல் படையினர் தூத்துக்குடி நிலையத்தைச் சேர்ந்த வீரர்கள், 'வீரா' என்ற கப்பலில் மன்னார் வளைகுடா பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அப்போது இந்திய கடல் எல்லையில் இலங்கையைச் சேர்ந்த மீன்பிடிப் படகு நிற்பதைக் கண்ட அவர்கள் உடனே கப்பலை அந்த பகுதிக்குச் செலுத்தி இலங்கை படகை சுற்றி வளைத்தனர்.

அந்தப் படகில் இருந்த 7 இலங்கை மீனவர்களைக் கைது செய்த கடலோர காவல் படையினர் படகையும் பறிமுதல் செய்து தூத்துக்குடி கொண்டு வந்தனர். (ஓ-6)

# சோனியாவின் தனிப்பட்ட கோபத்தால் இலங்கை தமிழர்கள் தாக்கப்படுகின்றனர்

## பா.ஜ.க. தமிழக துணைத்தலைவர் தெரிவிப்பு

இலங்கையில் மின்சாரம் பாய்ச்சிய முள் வேலிக்குள் மூன்று இலட்சம் தமிழர்கள் அடைக்கப்பட்டுள்ளனர். சோனியாவின் தனிப்பட்ட கோபத்தால் தமிழர்கள் தாக்கப்படுகின்றனர் என இராமேஸ்வரத்தில் பா.ஜ.க. சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பா.ஜ.க. தமிழக துணைத்தலைவர் ராஜா தெரிவித்தார்.

தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் தாக்குவதை கண்டித்தும் கச்சதீவை மீட்க கேட்டும் இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகம் அலுவலகம் முன் பா.ஜ.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. அகில இந்திய மீனவர் பிரிவு தலைவர் பொன். ராதா கிருஷ்ணன் தலைமை வகித்தார்.

ஆர்ப்பாட்டத்தின் போது செய்தியாளர்களிடம் பேசிய பா.ஜ.க தமிழக துணைத் தலைவர் ராஜா இலங்கையில் மின்சாரம் பாய்ச்சிய முள் வேலிக்குள் மூன்று இலட்சம் தமிழர்கள் அடைக்கப்பட்டுள்ளனர். அப்பாவி தமிழர்கள் கொல்லப்படுகிறார்கள்.

இலங்கை அரசுக்கு மத்திய அரசு அனைத்து உதவிகளையும் செய்துவிட்டு கண் துடைப்புக்காக தற்போது குடியுரிமை பற்றி பேசுகின்றனர்.

இது ராஜபக்ஷவுக்கு உதவுவது போன்ற செயல். சோனியாவின் தனிப்பட்ட கோபத்தால் தமிழர்கள் தாக்கப்படுகின்றனர் என்றார்: (ஓ-6)





யாழ் . கல்வி வலய பிரதேசத்திற்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஆசிரியர் தின நிகழ்வில் முன்பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் விருந்தினர்களை வரவேற்பதற்காக காத்து நிற்பதையும், விருந்தினராக கலந்து கொண்ட இ.எஸ்.பி.நாகரத்தினம் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் க.விமலநாதன், யாழ்.கல்வி வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி. அ.வேதநாயகம் ஆகியோர் நிற்பதையும் முன்பள்ளி மாணவர்களின் உடற்பயிற்சி நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

## ..வைப்புச் செய்பவர்களுக்கு பெறுமதியான பரிசில்கள்

(வட்டுக்கோட்டை)

ஆணைக்கோட்டை பிடாரி அம்மன் கோயிலடி உப தபால் அலுவலகத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை அன்று புதிதாக கணக்குகளை ஆரம்பிப்பவர் களுக்கு யாழ். தபால் நிலைய தேசிய சேமிப்பு வங்கியினரால் பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக பிடாரி அம்மன் கோயிலடி உப தபாலக தபாலதிபர் திருமதி தயா உசா ராஜ்குமார் தெரிவித்துள்ளார். (ஓ)

## பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் வட பிராந்திய முகாமையாளராக பணியாற்றிய தி.பாரதிதாசன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் 5ஆவது திட்டமான உலர் வலய நகர நீர் சுகாதார திட்ட முகாமையாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இவ் வடிகால் அமைப்புச் சபையில் கடந்த 5 வருடங்களாக பொறியியலாளராக இருந்த திருமதி சுகன்ஜா பாஸ்கரன் பிரதம பொறியியலாளராக பதவி உயர்வு பெற்று இம்மாதம் திகதியிலிருந்து வடபிராந்திய முகாமையாளராக கடமைகளை பொறுப்பேற்றுள்ளார். (ஓ)

# மின்சார சபையை இலாபமடையும் நிறுவனமாக மாற்றியமைக்கலாம்

## மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மின்சார சபை 1994 ஆம் ஆண்டில் இருந்து தான் நஷ்டத்தில் இயங்கி வருகின்றன. அதற்கு முன்னர் அந்நிறுவனம் சிறந்த இலாபத்தை அடைந்து வந்தது.

எனவே , அதனை மீண்டும் இலாபம் அடையும் நிறுவனமாக மாற்றியமைக்கத் தேவையான ஆலோசனைகளையும் , வழிகாட்டல்களையும் வழங்க வேண்டியுள்ளது என்று மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி ஜயதிஸ்ஸ்டி கொஸ்தா தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் பயன்பாட்டு ஆணைக் குழுவானது , 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டமூலத்தின் பிரகாரம் நிறுவப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட ஆணைக்குழுவின் செயற்பாடுகள் 6 மாதங்களை கடந்துள்ளன. இந்த ஆணைக்குழுவில் ஐந்து ஆணையாளர்கள் உள்ளனர்.

மின்சாரத் துறையில் ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்துவதே மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவின் பிரதான பணியாகும்.

அந்த வகையில், நாட்டில் மின்சார உற்பத்தியில் ஈடுபடும் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் எம்மிடம் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

பல்வேறு நிபந்தனைகள் உள்ளடங் கலாகவே நாங்கள் அனுமதிப் பத்திரங்களை விநியோகிப்போம்.

அந்த வகையில் இன்று வியாழக்கிழமை 91 நிறுவனங்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்கவுள்ளோம். ஒரு நிறுவனத்திற்கு 15 வருடகாலத்திற்கே அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். அதன் பின்னர் அனுமதி புதுப்பிக்கப்பட வேண்டும். அத்துடன் மின் உற்பத்தி மற்றும் விநியோக நிறுவனங்கள் பல்வேறு நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என வலியுறுத்துகின்றோம்.

இலங்கை மின்சார சபை 45 இலட்சத்திற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ளது.

எனினும் ,மின்சார சபை நஷ்டத்தில் இயங்குகின்றது. எனவே, இந்த நிறுவனத்தை இலாபம் அடையும் நிறுவனமாக மாற்றும் தேவை எமக்கிருக்கிறது. முக்கியமாக நிறுவனம் தொடர்பான தரவுகளை நாங்கள் பெற வேண்டியுள்ளது. அதனையடுத்து, அங்கு என்ன பலவீனங்கள் காணப்படுகின்றன என கண்டறியப்பட வேண்டும்.

கடந்த யுத்த காலத்தில் வடக்கு -கிழக்கு மாகாணங்களில் மின்சாரக் கட்டணங்கள் அதிகளவில் செலுத்தப்படவில்லை.

இந் நிலையில் , தற்போது இவ்வாறான நடை முறைப்பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளமையினால் இனி வரும் காலத்தில் மின்சார சபையை சிறந்த இலாபமடையும் நிறுவனமாக மாற்றியமைக்கலாம்.

மேலும், நாம் மாற்று மின் சக்தி குறித்து அதிகளவில் சிந்திக்க வேண்டிய காலம் வந்துள்ளது.

எதிர்காலத்தில் இவ்விடயம் குறித்து அதிகளவில் அக்கறை கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார். (ஓ-6)


## 1ஆம் ஆண்டு நெஞ்சகலா நினைவலைகள்

அன்னை மடியில் 18 ◆ 03 ◆ 1923



ஆண்டவன் அடியில் 19 ◆ 09 ◆ 2008

## அமரர் நா.ஆ.நமசிவாயம்

திதி. அபரபக்க பஞ்சமி (8.10.2009)

(புங்குடுதீவு திடீர் மரண விசாரணை அதிகாரியும் சமாதான நீதிபதியும் முன்னாள் தீவுத்தொகுதி பலநோக்குக்கூட்டுறவுச்சங்கங்களின் உத்தியோக பற்றற்ற மேற்பார்வை அதிகாரியும் முன்னாள் பிரதம எழுதுவினைஞர் பரீட்சைத்திணைக்களம் கொழும்பு)

ஆண்டொன்றும் ஆயிற்று -நீவீர்
அல்லலுற எம்மை ஆக்கி விட்டு
ஆறவில்லையே எம் மனம் இன்னும்
வாழ்க்கையின் வட்டத்தில் இன்பமும்
கூடவே துன்பமும் வருவது உண்மைதான்
இன்பத்தை இனிய நினைவுகளாக்கினீர்
துன்பத்தை'அனுபவ வாழ்க்கை பாடமாக்கினீர்
காலச்சக்கரத்தின் படிக்கற்களையும் - தடைக்
கற்களையும் சாலவே கடப்பது என்று -உங்கள்
வாழ்க்கையின் அத்தியாயங்களை
மீட்டிப்பார்த்துத்தான் நாம் கற்க வேண்டும்
சமூகத்தில் ஆற்றிய சேவைகளை ஊரறியும்
அன்பான நினைவுகளை உறவுகளும் அறியும்
ஆண்டுகள் பல ஆனாலும் மாளாது
உங்கள் பாதையின் ஞாபகங்கள்
சிவனடியை சித்தித்திருக்க இறைவனை
பிரார்த்திக்கும்............

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி
பிள்ளைகள்-மருமக்கள்
பேரப்பிள்ளைகள் , உறவினர்கள்.

சம்பியன் லேன்,
கொக்குவில். கிழக்கு,
கொக்குவில்.

(3742)


# இராணுவ ஒத்துழைப்பு தொடர்பில் இலங்கை-இந்தோனேசியா பேச்சுவார்த்தை

(கொழும்பு)

இந்தோனேசிய அரசாங்கமும், இலங்கை அரசாங்கமும் இராணுவ ஒத்துழைப்புத் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தோனேசியாவில் இராணுவத் தளபதி ஜனரல் டுஜோக்கோ சன்டோசாவிற்கும் இந்தோனேசியாவிற்கான இலங்கைத் தூதுவர் மேஜர் ஜெனரல் நந்தமல்லவாராச்சி ஆகியோருக்கும் இடையில் விசேட சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இராணுவப் பயிற்சி மற்றும் கல்வி நடவடிக்கைகளில் இரு நாடுகளுக்கும் இடையில் நிலவும் உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு இந்தோனேசியாவில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## கொழும்பு மற்றும் புற நகர்ப்பகுதிக்குள்

# வெடி பொருட்களைக் கொண்டுவர திட்டமிட்டிருந்த 3 புலி உறுப்பினர்கள் கைது

(கொழும்பு)

கொழும்பு மற்றும் புற நகர் பகுதிகளுக்குள் சயனைட் குப்பிகள் மற்றும் வெடிபொருட்களைக் கொண்டுவர திட்டமிட்டிருந்த மூன்று விடுதலைப்புலி உறுப்பினர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டுள்ள மூன்று பேரையும் தொடர்ச்சியாக விளக்க மறியலில் வைத்து விசாரிக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

மொஹமட் ஜவான் சின்னத்துரை மற்றும் ஆசிர் வாதம் ஞானப்பிரகாசம் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

யுத்தம் முடிவடைவதற்கு முன்னர் பெருந்தொகையான ஆயுதங்களை கொழும்புக்கு கொண்டுவர குறித்த நபர்கள் திட்டமிட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பயிற்சி பெற்ற குறித்த விடுதலைப்புலி உறுப்பினர்கள் இரண்டு இராணுவ முகாம் மீதான தாக்குதல்களில் பங்கேற்றுள்ளதாக கொழும்பு பயங்கரவாத தடுப்புப்பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர். (ஓ-6)

> மனித இனம் பெருந்தன்மை ஆனதுதான். ஆனால், மனிதர்கள் சிறுமையுள்ளவர்களாக இருக்கிறார்கள்.
>
> – ஸ்பெயின்

வலம்புரி

## முகாம் மக்களை நாமும் மறந்துவிட்டோம்

எங்களை இங்கிருந்து மீட்டு விடுங்கள் என முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்கள் பிரிட்டிஷ் அமைச்சரிடம் கண்ணீர் விட்டு கதறி அழுது முறையிட்டுள்ளனர்.

சிறிய கூடாரத்துக்குள் இருபத்துநான்கு பேர் வாழும் பரிதாபத்தை அவர்கள் எடுத்துக் கூறியுள்ளனர்.

மழைகாலம் நெருங்கும் நேரத்தில் அந்த மக்கள் எதிர் கொண்டுள்ள பேரவலத்தை எண்ணும் போது நெஞ்சம் பதைபதைக்கின்றது.

மழை வெள்ளம், போதிய மலகூட வசதியின்மை, தொற்று நோய் பரவல் என்ற சங்கிலித் தொடர் யுத்தத்தால், உடல் உள ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களை பழிவாங்கப் போகின்றது.

இந்த பேராபத்திலிருந்து முகாம் மக்களை காப்பாற்றுவது யார்?

ஐ.நா. பிரதிநிதிகள் வந்து பார்த்தனர், யப்பான் தூதுவர் முகாம்களுக்கு விஜயம் செய்தார். யுனிசெப் அதிகாரிகள் கொடுமை நடப்பதாக குரல் கொடுத்தனர். எதுவுமே உயிருக்காக-வாழ்வுக்காக போராடும் முகாம் மக்களுக்கு மீட்சி தரவில்லை.

இப்போது வவுனியாவிலுள்ள முகாம்களுக்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் மேம் பாட்டுத்துறை அமைச்சரிடம் மக்கள் கதறி அழுது '1948 இல் நீங்கள் செய்த அநியாயத்தால் இன்று வரை நாங்கள் அடிமைகளாக வாழ்கிறோம். முகாமில் அடைக்கப்பட்டுள்ளோம். எங்களை மீட்டு விடுங்கள்' என கெஞ்சி மன்றாடி உள்ளனர்.

இந்த மன்றாட்டமும் எதனையும் சாதித்து விடாதென்பது தெளிவு.

அரசு பிழைத்து விட்டால் மக்கள் வதைபடுவது வழமை என்ற நீதி நூல்களின் விதப்புரை இந்த நாட்டில் நடந்தேறுகின்றது.

அதனால் ஒரு நாட்டில் இனத்தின் பேரால் அரசு அடக்க, மக்கள் அழுது துடிக்கின்றனர்.

வருவோர் போவோரிடமெல்லாம் ஐயா! இந்த முகாமில் இருந்து எங்களை மீட்டு விடுங்கள் என்று கையேந்தி மன்றாடுகின்றனர்.

இந்தப் பரிதாபம் முட்கம்பி வேலிக்குள் நடந்து முடிவதால் நாமும் அதுபற்றி அறியாமல் இருக்கின்றோம்.

எங்களைப் பொறுத்தவரை ஏ-9 பாதையால் பயணம், மலிந்த விலையில் உணவுப் பொருள், இடையிடையே புறொயிலர் இறைச்சிச் சாப்பாடு, மூலைக்கு மூலை நின்று கையடக்கத் தொலைபேசி உரையாடல் அதில் சிரிப்பு, முகாகல், தகைகல் பின்னர் சின்னத்திரை நாடகம், போதாக் குறைக்கு மிக்சர் முறுக்கு, வடக்கின் வசந்தம் என்றபேச்சு.

இதில் எங்கள் உறவுகள் கண்ணீர் வடித்து உருகிப்போகும் வெந்துயரம் அறிந்திலோம். யுத்தம் நடந்தபோது சின்னக் கவலை. அது இப்போது இல்லை. அவர்கள் வேறு; நாங்கள்வேறு.

அடடா! என்னே தமிழர் உறவு-ஒற்றுமை-பாசம்-கழிவிரக்கம்.

ஓ! இறைவா! தேர்தலைக் கொண்டுவா, சோகத்தைக் கேட்டு வெந்து போன செவிகள் எங்கள் மைந்தர்களின் வீராப்பு வசனத்தில் ஆற்றுப்படட்டும்.

தேர்தல் முடிந்தபின் மீண்டும் சோகத்தில் திழைப்பம். அதுவரைக்கான ஒரு ஆறுதலைத் தான் கேட்கின்றோம் இப்போது.

# இம்மாத இறுதிக்குள்

# அனைத்துக்கட்சிக்குழுவை அனுப்ப இந்திய மத்திய அரசு முடிவு

(கொழும்பு)

இலங்கை முகாம்களில் அவலப்படும் தமிழர்களின் நிலையை அறிய இந்த மாத இறுதிக்குள் அந்த நாட்டுக்கு அனைத்துக் கட்சிக் குழுவை அனுப்பி வைக்க இந்திய மத்திய அரசு முடிபு செய்துள்ளது.

இலங்கையில் அகதி முகாம்களில் வசிக்கும் தமிழர்களுக்கு இதுவரை இந்திய அரசு மற்றும் தமிழக அரசு சார்பாக அனுப்பி வைக்கப்பட்ட நிவாரணப்பொருட்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக தமிழக அரசால் முதலில் அனுப்பப்பட்ட 80 ஆயிரம் குடும்பங்களுக்கு தேவையான உணவு மற்றும் துணி வகைகளும், 2ஆவது முறையாக 2 இலட்சத்து 25 ஆயிரம் குடும்பங்களுக்கு தேவையான உணவு, துணி வகைகள் மற்றும் பாத்திரங்களும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் அளிக்கப்பட்டுள்ளன.

மேலும் இந்திய அரசின் சார்பாக 2 முறை தேவையான மருந்துகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. விரைவில் போரில் ஊனமுற்றவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையிலும் செயற்கை கை மற்றும் கால்களை பொருத்தும் வகையில் பிரபல ஜெய்பூர் செயற்கை கை, கால் தயாரிக்கும் நிறுவனத்தின் மருத்துவக்குழுவை மத்திய அரசு அனுப்புகிறது.

இந்த மருத்துவக்குழு சுமார் 7ஆயிரம் பேருக்கு செயற்கை கால் மற்றும் கைகளை பொருத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பருவ மழை தொடங்குவதற்கு முன்பு அகதி முகாம்களில் இருப்பவர்கள் தங்கள் சொந்த இடங்களுக்கு குடிபெயரும் வகையில் அவர்களது இல்லங்களை சரி செய்யவும் தேவையாகும் பட்சத்தில் புதிய வீடுகள் நிர்மாணிக்கத் தேவையான சுமார் 2ஆயிரத்து 600 மெற்றிக்தொண் வீடு கட்டும் பொருட்களை இந்திய அரசு ஏற்கனவே அனுப்பி வைத்துள்ளது.

இதேபோல் மேலும் கூடுதலாக 2ஆயிரத்து 600 மெற்றிக் தொண் வீடு கட்டும் பொருட்களை அனுப்ப அனைத்து நடவடிக்கைகள்ளையும் இந்திய அரசு மேற்கொண்டுள்ளது.

கண்ணி வெடிகளை அகற்றும் பணியில் இந்தியாவில் சார்பாக சர்வத்ரா மற்றும் ஹரிசன் என்ற அமைப்புக்களை இந்திய அரசு சார்பாக ஈடுபடுத்தியுள்ளது.

இந்த குழுக்களை கடந்த யூலை மாதத்தில் இந்திய அரசு இலங்கைக்கு அனுப்பி வைத்தது. மேலும் 3 குழுக்களை விரைவில் அனுப்பவுள்ளது.

குழந்தைகளின் கல்விக்கு தேவையான கணனிகளையும் இந்திய அரசு வழங்க முன் வந்துள்ளது. போரினால் கணவர்களை இழந்த இலங்கை தமிழ்ப் பெண்களுக்கு தேவையான உதவிகளையும் மேலும் அவர்கள் சுயமாக தங்களது வாழ்க்கையை நடத்த அனைத்து உதவிகளையும் சேவா என்ற அமைப்பின் மூலமாக வழங்க முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை முகாம்களில் வசிக்கும் தமிழர்களின் உண்மை நிலைமையை கண்டறியும் வகையில் இந்திய அரசு இம் மாத இறுதிக்குள் அரசியல் கட்சி உறுப்பினர்களை கொண்ட ஒரு குழுவை அனுப்ப முடிவு செய்துள்ளது.

இந்தக் குழுவில் யார் யார் இடம்பெறுபவார்கள் என்பது குறித்து விரைவில் அதிகாரப் பூர்வமாக அறிக்கை வெளிவரவுள்ளது. அத்துடன் இந்தக் குழுவில் இந்திய அரச அதிகாரிகள் யாரும் கலந்து கொள்ளமாட்டார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய அரசுக்கும்,இலங்கை அரசுக்கும் இடையே 1974 மற்றும் 1976ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் கச்சதீவு பகுதிகளில் இந்திய மீனவர்கள் மீன் படிக்க உரிமை இல்லை. இந்திய அரசை பொறுத்தவரை இந்தப் பிரச்சினை முடிந்து போன பிரச்சினை. திரும்ப இப் பிரச்சினையில் இந்திய அரசு தலையிடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் வசிக்கும் இலங்கை அகதிகளுக்கு குடியுரிமை அளிப்பது குறித்து உள் துறை அமைச்சகம் தான் முடிபு எடுக்க வேண்டும் எனவும் இப்பிரச்சினையில் இந்திய வெளியுறவு அமைச்சகத்திற்கு எந்தப் பங்கும் கிடையாது எனவும் இந்திய மத்திய வெளியுறவு அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஓ-6)

## இரானுவக் கண்காட்சி 11 ஆம் திகதி வரை நீடிப்பு

(கொழும்பு)

இராணுவ சேவை ஆரம்பித்து 60 ஆண்டுகள் பூர்த்தியாவதனை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் இராணுவக் கண்காட்சியை மேலும் சில தினங்களுக்கு நீடிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இராணுவ ஆயுதங்கள் மற்றும் இராணுவத்துடன் தொடர்புடைய ஏனைய விடயங்கள் இந்த கண்காட்சியில் காட்சிப் படுத்தப்பட்டு வருகின்றது. பெருந்திரளான மக்கள் தொடர்ச்சியாக கண்காட்சியை கண்டு களிப்பதனால் காலத்தை நீடிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்று வரும் கண்காட்சி எதிர்வரும் 11 ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது. (ஓ-6)

## இந்தோனேசியாவை கேந்திரமாகக் கொண்டு சுனாமி எச்சரிக்கை கட்டமைப்பு

(கொழும்பு)

இந்து சமுத்திரத்தில் உள்ள 9 நாடுகள் இணைந்து சுனாமி எச்சரிக்கை கட்டமைப்பை பரீட்சித்துப்பார்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளன.

இந்து சமுத்திரத்தின் சுனாமி எச்சரிக்கை கட்டமைப்பின் ஊடாக இந்தோனேசியாவை கேந்திரமாகக் கொண்டு இந்த எச்சரிக்கை கட்டமைப்பிற்கான ஒத்திகை மேற்கொள்ளப்படவுள்ளது.

இம்மாதம் 14ஆம் திகதி மேற்கொள்ளப்படவுள்ள இந்த ஒத்திகையின் போது நாட்டின் இரண்டு மாவட்டங்களில் சுனாமி தொடர்பான எச்சரிக்கைக் கட்டமைப்பு சமிக்ஞையை வெளியிடவுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது.

அதற்காக மட்டக்களப்பு காலி ஆகிய மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டன. சுனாமி ஏற்படும் சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளப் பட வேண்டிய ஏற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் என்பவை தொடர்பாக இந்த ஒத்திகையின் மூலம் விளக்கப்படும் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் தேசிய இணைப்பாளர் கேணல் டி.பி.தென்னக்கோன் தெரிவித்தார். (ஓ-4)

## மகிழ்ச்சியுடன் இரு ; நான் உன்னிடம் கேட்பது அது ஒன்றுதான் -பாபா

அமெரிக்காவில் வாழ்ந்து வந்த ஜான் ஸின்க்லேர் எனும் கோடீஸ்வரன் தன் வாழ்க்கையின் ஓர் கட்டத்தில் மன அமைதியைத் தொலைத்து தொழில் பிரச்சினைகளில் சிக்கிக் கொண்டார். இவ்வாறான நாட்களில் ஒருநாள் மன முடைந்து அறையில் உட்கார்ந்த போது அவர் கடவுளை நோக்கி "கடவுளே, நீங்கள் எங்கு இருக்கிறீர்கள், எப்படி இருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியாது.எனக்கு ஒன்றுமட்டும் தெரியும் இறைவா, நீங்கள் இருக்கிறீர்கள். தயவு செய்து எனக்கு உதவி செய்யுங்கள்" என மனம் உருகி முழுமையான அடைக்கலத்துடன் பிரார்த்தனை செய்தார். அன்றிலிருந்து அவர் கடவுளின் கண்ணுக்குப் புலனாகாத கரம் தன்னை ரட்சிப்பதை உணர்ந்தார்.

தொடர்ந்து வந்த நாட்களில் அவர் வீட்டு ஹாலில் அதிகாலை இரண்டு மணியிலிருந்து மூன்று மணி வரை யாரோ நடமாடுவது போல் உணர்ந்தார். அவர் எழுந்து அவதானித்த போது ஒரு மனிதன் அசையாமல் நிற்பதைப் பார்த்தார். அவர் யார்? ஏன் வருகை தந்தார் எனப் புரியவில்லை அந்தக் கோடீஸ்வரனுக்கு.ஆனால் இனம் புரியாத மகிழ்ச்சியும் ஆனந்தமும் தன்னுள் உதயமாவதை உணர்ந்தார். இதேபோல் இன்னொரு முறையாகவும் அந்தக் கோடீஸ்வரனுக்கு அகக் காட்சி கிடைத்தது.

எனவே அவர் நியூயோர்க்கிலுள்ள ஆன்மீக மையத்திற்கு சென்று தன் அனுபவத்தைக்கூறி விளக்கம் கேட்டாள். அங்கிருந்த ஒருவர் எழுந்து சென்று ஒரு சிறு பொதி விபூதியைக் கொடுத்து சாயிராம் என்றார்.அத்துடன் இறைவன் ஸ்ரீ சத்ய சாயி பாபாவைத் தான் அவர் தரிசித்திருக்கிறார் எனவும் கூறினார்.கோடீஸ்வரரும் அளவில்லா இன்பத்துடன் பகவான் பற்றிய முழுச் செய்தியையும் கேட்டு அறிந்துகொண்டார்.



அன்றிலிருந்து அவருடைய இதயம் பகவானுக் காக ஏங்கத் தொடங்கியது. தாங்க இயலாத தாபமும் பகவானின் கருணையும் சேர கோடீஸ்வரன் பிரசாந்தி நிலையம் சென்றார். அங்கு சுவாமியின் தரிசனம் முடிந்ததும் பக வான் அவரைப் பேட்டி அறைக்கு அழைத்து ;"நான் உனக்கு உதவி செய்திருக்கிறேன்; உன்னிடம் இரு முறை வந்திருக்கிறேன். இருந்தாலும் உன் மனதில் அமைதியே இல்லை.நீ ஏன் ஸ்வாமிக்கு உதவி செய்யக்கூடாது? எனக்கேட்டார். அதற்கு "நிச்சயமாக ஸ்வாமி என்றார். அவர் அதற்கு சுவாமி "எப்போதும் மகிழ்ச்சியுடன் இரு. நான் உன்னிடம் கேட்பது அது மட்டும்தான்" என்றார். சுவாமி தன்னிடம் விரும்பியது அவரது நன்மையைத் தவிர வேறெதுவும் இல்லை என்பதை கேட்டு ஸ்தம்பித்து நின்றார். அதன் பின் அவர் கூறும்போது "இயேசுவை நான் பார்த்ததில்லை. ஆனால் இயேசுவை அனுப்பிய இறைவனே இங்கு உட்கார்ந் திருக்கிறார்" என்றார். இறைவன் எம்மிடம் விரும்பி நிற்பது எம் மகிழ்ச்சியை மட்டும்தான்.

ஜெய்சாயிராம் யாதவன்

# இலங்கை அரசுக்கு பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளஅமெ.வின் போர்க்குற்ற அறிக்கை

அமெரிக்க அரசாங்கம் தயாரித்து வரும் `போர்க்குற்றங்கள் குறித்த அறிக்கை இலங்கை அரசாங்கத்திற்கு பெரும் தலை வலியாக மாறியிருக்கிறது.



வன்னியில் நடந்த போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்களை உள்ளடக்கியதாக இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

போர்க்குற்ற விவகாரங்கள் தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதியின் விசேட செயலகம் இந்த அறிக்கையை தயாரிக்கிறது.

கடந்த மாதம் 21 ஆம் திகதி அமெரிக்க ராஜாங்க செயலரிடம் இது கையளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும்- திட்டமிடப்பட்ட திகதியில் சமர்ப்பிக்கப்படவில்லை. போர்க்குற்ற அறிக்கை இன்னமும் முழுமையாக்கப்படவில்லை.

இதனாலேயே அமெரிக்க காங்கிரஸ் அதனை சமர்ப்பிப்பதற்கான கால வரம்பை நீடித்துள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் ஜெவ் அன்டர்ஸன் கூறியிருக்கிறார்.

போரின் இறுதி நாட்களில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் குறித்த விபரங்களையும் இதில் உள்ளடக்க வேண்டியுள்ளது. அதற்குக் காரணமானவர்கள் யார் என்பதையும் முடிந்தவரையில் தெரிவிக்க வேண்டும்.

இது கடினமான பணி என்ற போரும் பல்வேறு தரப்புக்களில் இருந்து சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இதைத் தயாரித்து வருவதாக அமெரிக்க அரசின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை வெளியிடப்படுவது நான்கு வாரங்கள் பிற்போடப்பட்டுள்ளன. இது பற்றிய தகவல் அறிந்த நாளில் இருந்து இலங்கை அரசுக்கு பீதிக்காய்ச்சல் தொற்றி விட்டது.

யார் யார் மீது குற்றச்சாட்டு வருமோ , என்னென்ன குற்றச்சாட்டு வருமோ என்றெல்லாம் குழப்பமும் கலக்கமும் ஏற்பட்டுள்ளது. அரசியல் மட்டத்தில் இருந்து இராணுவ வட்டம் வரைக்கும் இந்த கலக்கம் ஏற்பட்டிருக்கிறது.

இந்த அறிக்கையை வைத்து விசாரணை நடக்குமோ -தண்டனை வழங்கப்படுமோ என்பதல்ல பிரச்சினை.

அறிக்கையில் இடம் பெற்றுவிட்டால் காலம் காலமாக போர்க்குற்றச்சாட்டு என்பது இலங்கை அரசுக்கும் தற்போது பதவியில் இருக்கின்ற அரசியல் வாதிகள், இராணுவ அதிகாரிகளுக்கும் நீங்காத பழியாக இருக்கும். வரும் காலத்தில் அவர்கள் சர்வதேச அளவில் பல வாய்ப்புக்களை இழக்க நேரிடலாம். வெளிநாட்டுப்பயணங்களை மேற்கொள்ள முடியாத நிலை கூட உருவாகலாம். இது தான் இலங்கை அரசுக்கு பெரும் பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் தான் போர் குற்றங்கள் தொடர்பாக அமெரிக்க காங்கிரஸில் அறிக்கை சமர்ப்பிக்கப்படுவது இலங் கையின் இறையாண்மையை மீறும் செயல் என்று இலங்கை அரசாங்கம் கூறியிருக்கிறது. எந்தவொரு அமெரிக்க அதிகாரியும் வன்னிப் போர் முனையில் நேரடியாக கண்காணிப்பில் ஈடுபடவில்லை. அரச சார்பற்ற நிறுவனங்களின் தகவல்களைக் கொண்டு இந்த அறிக்கை தயாரிக்கப்படுகிறது. மூன்றாவது தரப்பிடம் பெற்ற தகவல்களைக் கொண்டு போர்க்குற்றங்கள் பற்றிய அறிக்கையை தயாரிக்கப்படுவது நியாயமற்றது என்றும் அரசாங்கத்தரப்பில் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை போர்க் குற்றங்கள் தொடர்பான அறிக்கையை அமெரிக்கா தயாரிப்பதற்கு எதிராக ரணில் விக்கிரம சிங்கவும் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

2002இல் போர்க்குற்ற நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டபோது இலங்கையின் பிரதமராக இருந்த தான் அந்த உடன்பாட்டில் கைச்சாத்திடவில்லை. எனவே எந்தவொரு இலங்கைப் பிரஜையையும் சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்தில் நிறுத்த முடியாது என்று கூறியுள்ளார் ரணில் விக்கிரமசிங்க.

அத்துடன் இதன் மூலம் படையின ரைத்தான் காப்பாற்றியிருப்பதாகவும் காப்பாற்றப் போவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை அமெரிக்கா ஏற்றுக்கொள்ளாத சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்தின் நடவடிக் கைகளை இலங்கை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நியதி இல்லை என அரச.தரப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

போர்க்குற்ற நீதிமன்றத்தை ஏற்றுக் கொள்ளுமாறு ஐரோப்பிய ஒன்றியம் மற் றும் ஐக்கிய நாடுகள் அமைப்பு என்பன இலங்கைக்கு தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வந்தன. ஆனாலும் போர்க்குற்ற நீதிமன்றத்தை இலங்கை அரசாங்கம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது.

இலங்கையின் இறைமைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் உள்நாட்டிலேயே குற் றச் செயல்களுக்கு தண்டனை வழங்கப் படும் சர்வதேச நீதிமன்றங்களின் நடவடிக் கைகள் தொடர்பாக எமக்கு நம்பிக்கை இல்லை. என அரசாங்க அதிகாரியொருவர் கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இதனிடையே தேர்தல் பிரச்சாரங்களிலும் இந்த விவகாரம் எதிரொ லிக்கத் தொடங்கியுள்ளது. திரிபுபடுத்தப்பட்ட செய்திகள் மூலமும் மோசடியாகத் தயாரிக் கப்படும் ஒளிநாடாக்கள் மூலமும் எமது வீரர் களை போர்க்குற்ற நீதிமன்றத்தில் நிறுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நாட்டை மீட்ட இராணுவ வீரர்களை போர்க்குற்ற நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல விடமாட்டோம் என்பதை தென் மாகாண மக்கள் உலகுக்குப் பறைசாற்ற வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ தேர்தல் பிரசாரங்களின் போது கூறி வருகிறார்.

இது அரசாங்கத்தை இந்த விவகாரம் எந்தளவுக்கு ஆட்டிப்படைக்க ஆரம்பித்துள் ளது என்பதற்குப் போதுமான சாட்சியாக அமைந்துள்ளது.

அதேவேளை, அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுக்கும் சிங்கள அடிப்படைவாதக் கட்சி கள் மூலம் மற்றொரு புறத்தில் அமெரிக்கா வுக்கு எதிரான போராட்டங்கள் தூண்டி விடப்படுவதாகவும் தெரிகிறது.

இலங்கையை ஒரு போர்க்குற்ற நாடாக பிரகடனப்படுத்த புலிகளுக்கு ஆதரவான அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகள் சூழ்ச்சி செய்து வருகின்றன. புலிகள் அழிக்கப்பட்டு விட்டனர் என்ற வேதனையில் இந்த நாடுகள் இப்படிச் செயற்படுகின்றன.



புலிகளின் நோக்கங்களை நிறைவேற் றத் துடிக்கும் சர்வதேச சக்திகளின் சதித் திட்டங்களை முறியடிப்பதற்கு அணி திரளு மாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறார் தேசிய சுதந்திர முன்னணியின் தலை வரான விமல் வீரவன்ச.

அதேவேளை கடந்த வாரம் கொழும்பில் ஜாதிக ஹெல உறுமயவும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியிருந்தது. இது அமெ ரிக்காவுக்கு எதிராக நடத்தப்பட்ட போராட் டமே. அமெரிக்க சிவில் யுத்தத்தில் 6 இலட் சத்துக்கும் அதிகமானோர் பலியாகினர்.


அப்போது ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கன் குற்றவாளி இல் லையா? என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் எழுப்பிய கேள் வியும், முன்னாள் அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக், அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டன் ஆகி யோரை விமர்சித்து எழுப்பப்பட்ட கோஷங் களும் அமெரிக்க எதிர்ப்பு நிலைப்பாட்டின் தெளிவான அடையாளங்களாகும்.

மொத்தத்தில் தென்னிலங்கையில் உள்ள கட்சிகள் அனைத்துமே போர்க் குற் றங்கள் தொடர்பாக குற்றச் சாட்டில் இருந்து அரசாங்கத்தையும் படையினரையும் பாது காப்பதற்காக அணி வகுக்கத் தொடங்கி விட்டன.

போர்க் குற்றச் சாட்டில் இருந்து தப்புவ தற்காக தென்னிலங்கையில் அனைத்துத் தரப்புகளும் ஒன்றிணையும் நிலையில் - அமெரிக்கக் காங்கிரசில் சமர்ப்பிக்கப் படவுள்ள அறிக்கையின் பெறுமானமும், எதிர்பார்ப்பும் இன்னும் அதிகரித்துள்ளது.

**நன்றி: இணையத்தளம்**



வடக்கின் வசந்தத்தின் கீழ் பனை அபிவிருத்திச் சபையினால் 10 இலட்சம் பனம் விதை நடுகைத்திட்டத்தின் அங்குரார்ப்பண வைபவம் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் உள்ள மணற்காட்டு பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மருதங்கேணி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.கணேஷசலிங்கம் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட அமைச்சர் கே.என்.டக்ளஸ்தேவானந்தா நிற்பதையும் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட முன்னாள் பனை அபிவிருத்திச் சபைத்தலைவரும் பாராளுமன்ற உறுப் பினருமான சங்கரப்பிள்ளை சிவதாசன் உரையாற்றுவதையும் அமைச்சர் பனம் விதை நடுகையினை ஆரம்பித்து வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள் : டுசாந்தன்)

# ஏ-9 வீதியூடாக அஞ்சல் சேவையை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை

## பிரதி அஞ்சல் மாஅதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

ஏ-9 வீதியூடாக யாழ்ப்பாணத்துக்கான அஞ்சல் சேவையை விரைவில் ஆரம்பிக்க வட பிராந்திய பிரதி அஞ்சல் மாஅதிபர் வி.குமர குரு நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது தொடர்பில் வட பிராந்தியப் பிரதி அஞ்சல் மாஅதிபர் வி.குமரகுரு தெரிவித்ததாவது,

யாழ்.மாவட்டத்திற்கும் ஏனைய மாவட்டங்களுக்குமிடையிலான அஞ்சல் சேவையை ஏ-9 வீதியூடாக மேற்கொள்வதற்குப் பாதுகாப்பு அனுமதிக்காகப் பாதுகாப்பு அமைச்சுக்கு விண்ணப்பிக்கப்பட்டது.

எனினும் அனுமதி கிடைக்கப்படாமையால் ஏ-9 வீதியூடாக யாழ்ப்பாணத்துக்கான அஞ்சல் சேவையை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இந் நிலையில் பாதுகாப்பு அனுமதி பெறுவதற்காக யாழ்.அரச அதிபர் ஊடாக மீளவும் பாதுகாப்பு அமைச்சுக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் எதிர்வரும் 16 ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சுக்கு நேரடியாகச் சென்று ஏ-9 வீதியூடான அஞ்சல் சேவையை ஆரம்பிப்பதற்கான பாதுகாப்பு அனுமதியை வழங்குமாறு கேட்கவுள்ளேன்.

ஏ-9 வீதியூடான அஞ்சல் சேவை ஆரம்பிக்கப்பட்டதும் வெளிநாடுகளுக்கான பொதிகள் அனுப்புதல், வெளிநாட்டிலிருந்து வரும் பொதிகளை விநியோகிக்கும் சேவையில் விசேட நடைமுறை ஏற்படுத்தப்படும்.

அதாவது வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் பொதிகளுக்கான சுங்கத்தீர்வை இங்கேயே வைத்து சுங்கத் திணைக்கள அதிகாரிகளினால் பரிசோதிக்கப்பட்டு அறவீடு செய்யப்படும்.

அத்துடன் வெளிநாடுகளில் இருந்து வரும் பொதிகளுக்கான சுங்கத் தீர்வையையும் இங்கேயே வைத்து சுங்கத் தீர்வைத் திணைக்கள அதிகாரிகளினால் பொதிகளுக்குரியவர்களுக்கு முன்னால் உடைத்து பரிசீலிக்கப்பட்டு அறவிடப்படும்.

இதனால் பொதிகள் சேதமடையாமல் உரியவாறு கிடைப்பதுடன் பொதுமக்களுக்கு இத் திட்டம் பயன்மிக்கதாக அமையும். எனவே இத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு ஏ-9 வீதியூடான அஞ்சல் சேவை ஆரம்பிக்கப்பட வேண்டும் என வட பிராந்திய பிரதி அஞ்சல் மாஅதிபர் வி.குமரகுரு குறிப்பிட்டார். (ச-5)

## பாடசாலை மட்ட உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்ட மட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்படுகின்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் நேற்று யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இன்றைய போட்டிகள் யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

14 வயதுப் பிரிவு :- யாழ்.இந்துக் கல்லூரி எதிர் கொக்குவில் இராமகிருஷ்ணா வித்தியாலயம்.

16 வயதுப் பிரிவு:- யாழ்.இந்துக் கல்லூரி எதிர் செங்குந்தா இந்துக் கல்லூரி.

கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் கோண்டாவில் இராமகிருஷ்ணா வித்தியாலயம்.

18 வயதுப் பிரிவு:- கனகரட்ணம் ம.ம. வித்தியாலயம் எதிர் செங்குந்தா இந்துக் கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி எதிர் கொக்குவில் இராமகிருஷ்ணா வித்தியாலயம். (ச-7)

## வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் அஞ்சலகங்கள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி, பரந்தன் மற்றும் பளை ஆகிய இடங்களிலுள்ள அஞ்சல் அலுவலகங்கள் விரைவில் புனரமைக்கப்படவுள்ளதாக வட பிராந்திய பிரதி அஞ்சல் மாஅதிபர் வி.குமர குரு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது,

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ், அனர்த்தங்களினால் சேதமடைந்த பளை, பரந்தன் மற்றும் கிளிநொச்சி அஞ்சல் அலுவலகங்களின் பழைய கட்டிடங்கள் புனரமைக் கப்பட வுள்ளன.

இக் கட்டிடங்கள் புனரமைப்பதற்கான மதிப்பீடுக்ள் தொடர்பில் ஆராய மத்திய பொறியிலாளர், மதிப்பீட்டாளர்கள் அடுத்த வாரம் ஏ-9 பாதையூடாக யாழ்ப்பாணத்திற்கு வரவுள்ளனர் என அவர் குறிப்பிட்டார். (ச-5)

## அஞ்சல் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய பிரதி அஞ்சல்மா அதிபர் அலுவலகத்தால் யாழ்ப்பாணத்தில் உலக அஞ்சல்தினம்சிறப்பாககொண்டாடப்படவுள்ளது.

உலக அஞ்சல் தினமான நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். அஞ்சல் வளாகத்தில் விஷேட நிகழ்வுகளும், உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கானபரிசளிப்புவிழாவும்இடம்பெறவுள்ளது.

வடபிராந்திய பிரதி அஞ்சல்மா அதிபர் வி.குமரகுரு தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் யாழ்.உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் கலந்து கொள்கின்றார். அத்துடன் அஞ்சல் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களினால் இன்று காலை 9 மணிக்கு யாழ்.போதனா வைத்திய சாலை இரத்த வங்கிக்கு இரத்ததானம் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இதேவேளை உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விபரம் வருமாறு.

யு.பி.எஸ்

அ.செல்வக்குமாரி(யாழ்.தபாலகம்)

உபதபாலதிபர்கள்

பி.கே.குமரிகமி (மடுகந்த)

எல்.ஜி.வாஸ்கவங்கே(தலைமன்னார்)

எஸ்.கௌரிமலர்(புலோலி)

தபால் தரம் பிரிக்கும் அலுவலர்

கே.உருத்திரேஸ்வரன்(யாழ்.தபாலகம்)

தபால் ஊழியர்கள்

என்.எம்.ஞானசீலன்(கரவெட்டி தபாலகம்)

பி.தேவராஜா(முருங்கன் தபாலகம்)

ரி.சந்தரமோகன்(பெரியகுளம் தபாலகம்)

அலுவலக உதவியாளர்

பி.யோகரத்தினம்(ம.அ.அ.அலுவலகம் வவுனியா)

எ.ஆர்.முகமது சுக்ரான்(எருக்கலம்பிட்டி தபாலகம்)

எ.ரி.யோகேந்திரன்(மானிப்பாய் தபாலகம்)

நாடகம்

ரி.சந்திரமோகன்(நெரிக்குளம் தபாலகம்)

கவிதை

எஸ்.செல்வசோதி(உபதபாலதிபர் திருநெல்வேலி).

ரி.சந்திரமோகன்(தபாலகம் நெரியகுளம்)

கிரிக்கெட்

யாழ்.மாவட்ட செயலக அணி.

சித்திரம்

சிரேஷ்ட பிரிவு

ரி.பபிராஜ்-யா/இணுவில் மத்திய கல்லூரி

ஆர்.ஜெகனிவாசன்- யா/இணுவில் மத்திய கல்லூரி.

எச்.எவ்.பர்கானா- மன்னார் அல்மினா ம.வித்தியாலயம்.

கனிஷ்ட பிரிவு

அ.கௌதமன்- சென் ஜோன்ஸ் கல்லூரி

பி.பிரகாஷ் - யா/இந்து ஆரம்பபாடசாலை

எ.என்.றொக்பிலா பேகம் -மன்னார் அல்மினா ம.வி.

கட்டுரை

சிரேஷ்ட பிரிவு

இஅபிராமி- சுழிபுரம்விக்ரோறியாக்கல்லூரி

ந.கோகினி- கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.

எஸ்.குணகிருஜா- சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி

கனிஷ்ட பிரிவு

வ.யாழினி- கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி

ரி.காயத்தரி- சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி

த.நிகாசினி- மன்னார் சென் சேவியர் மகளிர் கல்லூரி

காற்பந்து

வலிகாமம் வலயம்.

கைப்பந்து

வடமராட்சி வலயும். (ச)

## நான்கு இளைஞர்கள் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் விசேட அதிரடிப் படையினரும் பொலிஸாரும் நடத்திய தேடுதலில் 4 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற வீதிச் சோதனை நடவடிக்கையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

தொழிலுக்காக வெளியூர்களுக்குச் சென்ற இந்த நான்கு இளைஞர்களும் வீடுகளுக்கு வந்துகொண்டிருந்தபோதே கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது. (ச-5)

# யாழ்.மாவட்டத்தில் நேற்றுவரை 11 ஆயிரத்து161 பேர் மீள்குடியமர்வு

## அரச அதிபரின் செய்திக் குறிப்பில் தெரிவிப்பு

யாழ். மாவட்டத்தில் கடந்த ஆவணி மாதம் தொடக்கம் நேற்றுவரை 3 ஆயிரத்து 600 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 161 பேர் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்துள்ளார்.

மீள்குடியமர்ந்த மக்களுக்கு உலக உணவுத்திட்ட நிவாரணம் வழங்கப்பட்டு வருவதுடன் அவர்களுக்கான அடிப்படைத் தேவைகள் அடையாளம் காணப்பட்டு அவற்றை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வவுனியாவிலுள்ள நலன்புரி நிலையங்களிலிருந்து ஒன்றுவிட்ட நாள்களில் 600 தொடக்கம் 650 வரையான மக்கள் அழைத்து வரப்பட்டு அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

யாழ். மாவட்டத்திலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் யாழ்ப்பாணத்தை சொந்த இடமாகக் கொண்ட 513 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 474 பேரை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா நலன்புரி நிலையங்களிலுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கர்ப்பிணித் தாய்மார்கள் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த 368 பேர் கடந்த 5ஆம் திகதி அழைத்து வரப்பட்டு அவர்களது சொந்த இடங்களுக்கு விடுவிக்கப்புட்டுள்ளனர் என அரச அதிபரின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மீள் குடியமர்த்தப்பட்டோரின் விபரம் வருமாறு.

| பிரதேச செயலர் பிரிவு | யாழ் மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து யாழ் மாவட்டகிராமங்களில் வசித்த குடும்பங்கள் | | புதிதாக விடுவிக்கப்பட்ட பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து யாழ் மாவட்டத்திலுள்ள நலன்புரி நிலையங்களில் வசித்த குடும்பங்கள் | | புதிதாக விடுவிக்கப்பட்ட பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து வவுனியா மாவட்டத்திலுள்ள நலன்புரி நிலையங்களில் வசித்த குடும்பங்கள் | | மொத்தமாக மீள்குடியேற்றம் செய்யப்பட்டோர் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | குடும்பம் | அங்கத்தவர் | குடும்பம் | அங்கத்தவர் | குடும்பம் | அங்கத்தவர் | குடும்பம் | அங்கத்தவர் |
| நெடுந்தீவு | | | 11 | 33 | 110 | 328 | 121 | 361 |
| வேலணை | 219 | 759 | 61 | 202 | 803 | 2552 | 1083 | 3513 |
| ஊர்காவற்துறை | | | 37 | 105 | 424 | 1375 | 461 | 1480 |
| காரைநகர் | | | 11 | 32 | 381 | 1174 | 392 | 1206 |
| யாழ்ப்பாணம் | | | 302 | 877 | 1 | 1 | 303 | 878 |
| நல்லூர் | | | 58 | 135 | 11 | 44 | 69 | 179 |
| சண்டிலிப்பாய் | | | 136 | 351 | 14 | 38 | 150 | 389 |
| சங்கானை | | | 39 | 114 | | | 39 | 114 |
| உடுவில் | | | 24 | 60 | 9 | 35 | 33 | 95 |
| தெல்லிப்பளை | | | 33 | 127 | 2 | 4 | 35 | 131 |
| கோப்பாய் | | | 36 | 86 | 5 | 18 | 41 | 104 |
| சாவகச்சேரி | | | 99 | 249 | 19 | 79 | 118 | 328 |
| கரவெட்டி | | | 35 | 71 | 16 | 53 | 51 | 124 |
| பருத்தித்துறை | | | 408 | 1128 | 15 | 38 | 423 | 1166 |
| மருதங்கேணி | 214 | 791 | 55 | 147 | 2 | 4 | 271 | 942 |
| பல்கலைக்கழக மாணவர்கள் | | | | | 10 | 151 | 10 | 151 |
| மொத்தம் | 433 | 1550 | 1345 | 3717 | 1822 | 5894 | 3600 | 11161 |

## ஏ-9 பாதை திறந்தது முதல்...

அவர் மேலும் தெரிவித்ததாவது, யூலை மாதம் 10 பஸ்களில் 444 பேரும், ஆகஸ்ட் மாதம் 314 பஸ்களில் 15 ஆயிரத்து 592 பேரும் செப்ரம்பர் மாதம் 864 பஸ்களில் 23 ஆயிரத்து 729 பேரும், ஒக்டோபர் மாதம் முதல் 2 நாட்களில் 22 பஸ்களில் 936 பேரும் யாழ்ப்பாணத்தில் இருந்து ஏ-9 வீதியூடாக வெளிமாவட்டங்களுக்கு பயணம் செய்துள்ளனர்.

அத்துடன் தென்னிலங்கையில் இருந்து ஏ-9 வீதியூடாக யாழ்ப்பாணத் திற்கு கடந்த யூலை மாதம் முதல் ஒக்டோபர் 2ஆம் திகதி வரை 194 வாகனத் தொடரணிகளில் 3 ஆயிரத்து 921 வாகனங்களில் ஆயிரத்து 751 மெற்றிக் தொன் பொருள்களும் எடுத்து வரப்பட்டதுடன் 76 கூலர் வாகனங்கள் சேவையில் ஈடுபட்டுள்ளன.

இதில் யூன் மாதம் 16 வாகனத் தொடரணிகளில் 330 வாகனங்களில் 268 மெற்றிக் தொன் பொருள்களும் யூலை மாதம் 43 வாகனத் தொடரணிகளில் 854 வாகனங்களில் 460 மெற்றிக் தொன் பொருள்களும் ஆகஸ்ட் மாதத்தில் 57 வாகனத் தொடரணிகளில் ஆயிரத்து 167 வாகனங்களில் 498 மெற்றிக் தொன் பொருள்களும் செட்ரம்பர் மாதத்தில் 75 வாகனத் தொடரணிகளில் ஆயிரத்து 511 வாகனங்களில் 511 மெற்றிக் தொன் பொருள்களும் ஏ-9 வீதியூடாக யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளன. அத்துடன் ஒக்டோபர் முதல் இரண்டு நாட்களில் 3 வாகனத் தொடரணிகளில் 59 வாகனங்களில் 14 மெற்றிக் தொன் பொருள்களும் வந்துள்ளது. (ச-5)

## ஈரானிய தூதர...

நடைபெறும் இந்தக் கொண் டாட்டங்கள் மற்றும் விழாக்கள் மிக முக்கியமா னவை என்றும் அவர் அப்போது குறிப்பிட்டார். போர்க் காலத்தில் ஈரானிய அரசு இலங்கைக்கு வழங்கிய உதவிகளுக்கு தரைப் படைத் தளபதி தனது நன்றிகளைத் தெரிவித்தார். (ச-5)

## நாணயத்...

முத்திரை பொதித்தல், நாணயத் தாளின் மீது ஏதாவது வரைதல், ஏதாவது இலட்சினை அல்லது முத்திரை ஒட்டுதல், நாணயத்தாள்கள் மீது இயல்பான ஏதாவது பொருட்களை அல்லது விளம்பர வடிவிலான பொருட்களை ஒட்டுதல், ஏதாவது நாணயத்தாள்களை மீளத் தயாரித்தல் அல்லது உரு மாதிரி செய் தல் ஆகியன 1949ஆம் ஆண்டு 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் கீழ் தண்ட னைக்குரிய குற்றமாக இது தொடர்பான அறி வித்தலில் மத்திய வங்கி தெரிவித் துள்ளது. குறித்த குற்றத்தின் கீழ் சிறைத்தண்டனை, அபராதம் அல்லது சிறைத் தண்டனையும் அபராதமும் (இரண்டும்) தண்டனைகளாகும் என்றும் அந்த அறிவித்தலில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ச)

## நெதர்லாந்து...

தொடர்பில் ஆராய்வதற் காக இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார். நெதர்லாந்து தூதுவருடன் இலங்கைக்கான நெதர்லாந்து தூதரக முதலாவது செயலாளர், தொல்லியல் ஆய்வு நிபுணரான பௌத்த பிக்கு ஆகியோர் அடங்கிய குழு வினரே இவ் விஜயத்தை மேற்கொண்டிருந்த னர்.

நேற்றுக்காலை 9 மணிக்கு யாழ்ப்பாணத்திற்கு வந்த இக் குழுவினரை யாழ். அரச அதிபர் க.கணேஷ், 51ஆவது படையணியின் தளபதி மற்றும் படை அதிகாரிகள் யாழ். கோட்டை உட்புறங்களுக்கு அழைத்துச் சென்றனர். தொடர்ந்து மாவட்ட செயலகத்திற்கு சென்ற நெதர்லாந்து தூதுவருக்கு யாழ். நிலைமைகள் தொடர்பில் அரச அதிபர் க.கணேஷ் எடுத்துக் கூறினார். இதனைத் தொடர்ந்து வட்டுக்கோட்டை தென்னிந்திய திருச்சபை தேவாலயத் திற்குசென்ற நெதர்லாந்து தூதுவர் அங்கு வைக்கப்பட்டுள்ள யாழ். கோட்டையில் உபயோகிக்கப்பட்ட பொருட்களைப் பார்வையிட்டார். (ச-5)

## தமிழர்கள் நாட்டை விட்டுச் செல்ல...

தென்பகுதியான கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலியைச் சேர்ந்த கத்தோலிக்க மக்கள் 15 நாட்களுக்கு முன்னர் வீதிகளில் இறங்கிப் போராடி இருந்தார்கள். திருநெல்வேலி மாவட்டத் தலை நகரான நாகர்கோவிலில் எதிர்ப்பு ஊர்வலம் நடத்திய அவர்கள், பின்னர் ஒருநாள் உண்ணா நிலைப் போராட்டமும் நடத்தினார்கள்.

பாளையங்கோட்டை பேருந்து நிலையத்திற்கு முன்பாக உண்ணாநிலைப் போராட்டக் காரர்கள்அமர்ந் திருந்தார்கள். புரட்டஸ்தாந்து மற்றும் கத்தோலிக்க மக்கள் இருவருமே போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தார்கள். அரசியல் கட்சிகளின் உள்ளூர் தலைவர் களும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்க அங்கு வந்து உரையாற்றிச் சென்றார்கள். ஒற்றுமையை வெளிப் படுத்தும் இந்த ஆதரவுப் போராட்டங்கள் நடந்தபோது தமிழ் நாட்டில் வசிக்கும் ஈழத் தமிழர்கள் என்ன செய்தார்கள்?

அந்தஊர்வலத்திலோ அல்லது உண்ணா நிலைப் போராட்டத்திலோ அவர்கள் பங்கு பற்றி இருக்கவில்லை. விசாரித்ததில் போராட்டம் நடைபெற்ற காலப்பகுதியில் மூன்றுநாட்களுக்கு முகாமைவிட்டுவெளியே செல்லக் கூடாது என்று மறைமுகத் தடை விதிக்கப்பட்டிருந்தது எனத் தெரியவந்தது.

கியூ பிரிவுப் பொலிஸுக்கு சொல்லாமல் நாம் எங்கும் செல்ல முடியாது. அப்படி இருக்கையில் நாங்கள் ஊர்வலத்திற்குப் போகப் போகிறோம் என்று எம்மால் எப்படிச் சொல்ல முடியும்? நாங்கள் இங்கு மகிழ்வாக வேலை செய்கிறோம். நாங்கள் பிறந்த நாட்டில் எமக்கு கிடைக்காத சுதந்திரத்தை இங்கு அனுபவிக்கின்றோம்.

உண்ணாநிலைப் போராட்டம் அல்லது ஊர்வலத்தில் கலந்து கொள்வதன் மூலம் இடர் படுவதற்கு நாம் விரும்பவில்லை. அந்தப் போராட்டங்கள் எமக்கானவை என்பது தெரியும். அதை வரவேற்கின்றோம். ஆனால் நாங்கள் பங்கேற்கப் போவதில்லை என்றார் நடுத்தர வயது மதிக்கத் தக்க ஒருவர். கடந்த 21 வருடங்களாக அவர் இந்தியாவிலேயே வசிக்கின்றார். தமிழர்களில் எவரும் இந்தியாவிற்குச் செல்வதை சிங்களவர்கள் எதிர்ப்பதில்லை. சொல்லப்போனால் இலங்கையில் இருந்து தமிழர்கள் எந்த வெளிநாடுகளுக்குச் செல்வதையும் அவர்கள் எதிர்ப்பதில்லை என்று ரெடிஃப்டொட் கொம்மிற்குச் சொல்லப்பட்டது.

அப்படி வானூர்தி மூலம் இந்தியாவை வந்தடைந்தபவர்களிடம் மண்டபம் அகதிகள் முகாமிற்குச் சென்று பதிவு செய்து கொள்ளுமாறு கூறப்படுகின்றது. பதிவு செய்த பின்னர் கியூ பிரிவு காவல்துறையினர் அவர்களிடம் விசாரணை நடத்துவர். அதன் பின்னர் அவர்கள் முகாமில் தங்கலாம் பண வசதி இருப்பின் வெளி இடங்களிலும் தங்கிக் கொள்ளலாம். (ச-5)

## கட்சி அலு...

பாதிக்கப்பட்ட அரசியல் வாதிகள் பொலி ஸ்மா அதிபரிடம் முறையிட்டும் உள்ளனர். முன் அறிவித்தல் ஏதும் இன்றி நேற்று முன்தினம் மாலையுடன் தமக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு வாபஸ் பெறப்பட்டுள்ளதாக வெள்ளி மலை எனப்படும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து கிருஷ்ண பிள்ளை ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைத் தலைவர்களுக்கு 4 பொலிஸாரும் பிரதித் தலைவர் உட்பட உறுப்பினர்களுக்கு இரண்டு பொலிஸாரும் பாதுகாப்பிற்காக வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை மட்டக்களப்பில் உள்ள தமது அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு வாபஸ் பெறப்பட்டமை தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளதாக கொழும்பிலுள்ள அரசியல் தலைவர்கள் தெரிவித்துள்ளனர். (ச-5)

## தமிழ் விஞ்...

தொடர் பான இவரது ஆராய்ச்சிக்கு இப்பரிசு வழங்கப்படுகிறது. இவருடன் இந்த விருதை அமெரிக்காவை சேர்ந்த தாமஸ் ஏ.ஸ்டீட்ஸ் மற்றும் இஸ்ரேலை சேர்ந்த அடா இ.யோனத் ஆகியோர் பகிர்ந்து கொள்கிறார்கள். தமிழரான வெங்கட்ராமன் ராமகிருஷ்ணன் 1952ல் சிதம்பரத்தில் பிறந்தவர். தற்போது அமெரிக்க குடியுரிமை பெற்று அங்கு வசித்து வருகிறார். இதற்கு முன்னராக தமிழகத்தை சேர்ந்த சர் சி.வி.ராமன் மற்றும் சுப்ரமணியம் சந்திரசேகர் ஆகியோர் நோபல் பரிசு பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5,14)

## மு.க.ஸ்டா...

போரினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களை மீளக்குடியமர்த்த இந்திய அரசு உதவ வேண்டும் என தமிழக முதல்வர் மு.கருணாநிதி, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு பலதடவைகள் கடிதம் எழுதியிருந்தார்.

இந்நிலையில் இந்திய உட்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தமிழகத்துக்குச் சென்று தமிழக முதல்வருடன் இது குறித்து பேசியதுடன் விஷேட குழுவொன்றை அனுப்புவது என்றும் உறுதியளிக்கப்பட்டது.

அதனடிப்படையில்தமிழகதுணை முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான குழுவை இலங்கைக்குஅனுப்புவதற்கு மத்திய அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

இம் மாத இறுதியில் இலங்கைக்கு வரும் இக்குழுவினர் ஜனாதிபதி உள்ளிட்ட முக்கிய தலைவர்களு டன் பேச்சுவார்த் தையில் ஈடுபடுவர் எனவும் கூறப்பட்டது.

அத்துடன்வடக்கிலுள்ள நலன்புரி முகாம்களை பார்வையிடு வதற்கு முகஸ்டாலின்தலைமையிலான குழு வவுனியாவிற்குச் செல்வதுடன்யாழ்ப்பாணத்துக்கும்விஜயம் செய் வார்கள் எனவும் கூறப்படுகின்றது.

(மற்றொரு செய்தி 11ஆம் பக்கத்தில்) (ச-5)


### மக் லியோட் வைத்தியசாலை, இணுவில்

**ஸ்தாபிதம் – 1898**

மிகவும் பழமை வாய்ந்த சிறப்புமிக்க இணுவில் மக் லியோட் வைத்தியசாலையில் பின்வரும் வைத்திய நிபுணர்கள் வைத்திய சேவையை வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை அறியத்தருகின்றேன்.

01. Dr.Mrs.S. நாகேந்திரா, பொது வைத்திய நிபுணர், Consultant Physician
வியாழன் மாலை 1.30 மணி
02. Dr. S.சிவகுமார், பொது சத்திரசிகிச்சை நிபுணர், Consultant General Surgeon
புதன் மாலை 4.00 மணி
சிறியபொது சத்திர சிகிச்சையும் நடைபெறும்.
03. Dr.Mrs.G. பவானி, மகப்பேற்று நிபுணர், Consultant V.O.G
வியாழன் மாலை 3.30 மணி
04. Dr.P.லக்ஸ்மனன், இதய சத்திரசிகிச்சை நிபுணர், Consultant Cardiac Surgeon
ஞாயிறு 12.00 மணி
05. Dr.B.திருமாறன், காது, மூக்கு, தொண்டை சத்திரசிகிச்சை நிபுணர், Consultant E.N.T. Surgeon
புதன் மாலை 4.00 மணி
06. Dr.Mrs.V.சித்ரா வாமதேவன், குழந்தையியல் நிபுணர், Paediatrician
திங்கள், வெள்ளி மாலை 4.00 மணி

- சகலவித ஆய்வு கூட பரிசோதனை செய்து கொடுக்கப்படும்.
- O.P.D வெளிநோயாளர் பகுதி சிகிச்சைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**தேவை**

M.B.B.S பட்டம் பெற்ற வைத்திய அதிகாரி அல்லது பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரி (Registered Medical Officer) இங்கு வைத்திய சேவை புரிவதற்கு வைத்திய மேலதிகாரியைத் தொடர்பு கொள்ளலாம்.

தொலைபேசி: 021 2227669
077 6171451

வைத்திய மேலதிகாரி
Medical Superintendent,
Mc. Leod Hospital,
Inuvil.

(3753)


## மரண அறிவித்தல்

### திருமதி பவளம் கதிர்காமு



அல்வாய் மேற்கைப் பிறப்பிடமாகவும், அரியாலை திருமகள் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பவளம் கதிர்காமு அவர்கள் 07.10.2009 புதன் கிழமை கர்த்தரின் மகிமைக்குள் பிரவேசித்துள்ளார்.

இவர் காலஞ்சென்ற கதிர்காமு அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற வைரமுத்து இலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற முத்தையா சீனிமுத்து, இரத்தினம், பார்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சரஸ்வதி, காலஞ்சென்ற காந்தமலர் மற்றும் செல்வமலர், யோகநாதன், ரஞ்சன் ஆகியோரின் அன்புத் தாயாரும், இளைப்பாறிய அதிபர்-வைகுந்தசாமி, சின்னத்துரை (இ.போ.ச), காலஞ்சென்ற அருமைலிங்கம் மற்றும் பராசக்தி அக்னஸ் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ் சென்ற மனோகரன் மற்றும் முரளிதரன், உமாகரன், ஜெயந்தி, அநுரா, அசோக், டெனிஸ்ரா, அமர்தாப், பிரசாந், பிரதீப், நிசாந்தன், சுபா, சுபாகரன், சுபாகினி ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை பின்னர் அறிவிக்கப்படும்.

14, திருமகள் வீதி,
அரியாலை மேற்கு.

தகவல்..
க.யோகநாதன் (மகன்)
021 2229600

(3755)


### யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

தரம் 6ஆம் வகுப்பு அனுமதிக்கான

**விண்ணப்பம் கோரல் – 2010**

தரம் 06ஆம் வகுப்பு அனுமதிக்கான விண்ணப்பப்படிவங்களை பாடசாலை நேரத்தில் கல்லூரி அலுவலகத்தில் பெற்று விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவுத்திகதி
30.10.2009

(C-3451) அதிபர்.



### ஆங்கில மற்றும் தகவல் தொழில்நுட்ப வருடம்

**2009**

**இவ் வருடத்தின் மிகப் பிரமாண்டமான நிகழ்வு**

இலங்கையின் முதற்தர

'சமகால தகவல் தொழில்நுட்ப நூல் வெளியீடும், தகவல் தொழில்நுட்பக் கருத்தரங்கும்'



- இடம் :-யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி விவேகானந்தா மண்டபம்
- காலம் :-10.10.2009 சனிக்கிழமை
- நேரம் :-காலை 10.00 மணி

(C-3448)

'சமகால தகவல் தொழில்நுட்ப உலகுடன் நீங்களும் இணையுங்கள்'

சமகால தகவல் தொழில்நுட்ப விழாக்குழு


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.10.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.